*பார்வைக்கு...*

| | |
|---|---|
| சஞ்சிகை | : இளவேனில் ~13 |
| வெளியீடு | : 21 தை 2018 |
| வெளியிடுவோர் | : கேசி தமிழ் மன்றம் |
| ஆசிரியர் குழு | : க.மணிவண்னன், சத்தியா, பகீரதன் |
| வடிவமைப்பு | : க.பார்த்தீபன் |
| அட்டைப்படம் | : சத்தியா |
| வரைபுகள் | : சியாமளா சத்தியா |
| தொடர்புகட்கு | : கேசி தமிழ் மன்றம்<br>PO Box 2516,<br>Fountain Gate, VIC 3805<br>Australia |


# பொங்கும் இளவேனில்

**அட்டை படம் : 2017 – கேசிபொங்கலின் போது பிடிக்கப்பட்டது**



*நிரையாய் பானை அடுக்கி வைத்து*

*மிடுக்காய் உலையில் பொங்கல் சமைக்க*

*விரும்பிய கலைகள் பலவும் படைக்க*

*பாசமாய் கூடி மகிழ்ந்து களிக்க*

*பாரம்பரிய ஆட்டம் நிறைக்க*

*கேசிபொங்கல் மீண்டும் வந்ததே*

# இளவேனில்

## ஆசிரியரின் உள்ளத்திலிருந்து

இளவேனில் புதுமையான அம்சங்களோடு புதிய பொலிவுடன் 2018 தைத் திங்கள் வெளியீடாக இன்று உங்கள் கரங்களில் தவழ இருக்கின்றது. சமூக வலைத்தளங்களில் ஆக்கங்கள் பற்றிய விளம்பர அறிவிப்புக்களை பார்த்து இதுவரை இளவேனில் சஞ்சிகையில் எழுதாத புதியவர்கள் பலர் ஆர்வத்துடன் தங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைத்து எங்களை உற்சாக வெள்ளத்தில் மூழ்க வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எங்கள் மனமுவந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு மேலும் புதிய தலைமுறை எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் அவர்தம் படைப்புக்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் இளவேனில் என்றென்றும் தயாராக உள்ளது என்பதையும் உறுதி கூறுகிறோம்.

வழமை போன்று சிறுவர் ஆக்கங்கள், வளர்ந்தோர் படைப்புக்கள், துணுக்குச் செய்திகள் என்பவற்றோடு உங்கள் சிந்தனைக்கு விருந்து படைக்கும் முயற்சியாக 'படம் காட்டுறோம் பார்த்து சொல்லுங்கோ' என்று ஒரு படத்தை விளம்பரம் செய்திருந்தோம். பலர் தங்கள் எண்ணக்கருத்துக்களை கவிதையாக, சிறு பத்தியாக வெளிப்படுத்தியிருந்தார்கள். அத்துடன் 'வெண்பா' இரண்டிற்கான இறுதி அடிகளைத் தந்து அவற்றைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டிருந்தோம். சிலர் தங்கள் ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார்கள். கிடைத்த அத்தனை சிந்தனைகளும் இந்த இதழை அலங்கரித்திருக்கின்றன.

பாரதி சொன்னது போன்று சொல் புதிது பொருள் புதிதாக இளவேனில் இனிவரும் காலங்களில் புதிய சிந்தனைகளோடு வெளிவர உங்கள் அனைவரினதும் ஆதரவை ஆசிரியர் குழு பணிவோடு வேண்டி நிற்கிறது. அத்துடன் நாளைய சந்ததியினரை தமிழில் எழுதத் தூண்டும் தார்மீகக் கடமையும் உங்கள் ஒவ்வொருவரையும் சார்ந்திருக்கிறது என்பதை மனதில் கொண்டு எங்கள், உங்கள் குழந்தைகளை தமிழில் எழுதச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் அடுத்த இதழில் சந்திப்போம்.

**நன்றி !**

**இளவேனில் ஆசிரியர் குழு.**

# தலைவரின் உள்ளத்திலிருந்து ......

செம்மொழியான எம்மொழி தமிழ் மொழியையும் தமிழர் தம் உயரிய கலை கலாச்சாரங்களையும் எம் இளம் தலைமுறைக்கும் சந்ததிக்கும் ஊட்டும் நோக்கில் இற்றைக்கு 8 வருடங்களுக்கு முன் 2010ம் ஆண்டில் விக்டோரியா மாநிலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கேசி தமிழ் மன்றம் இன்று ஒரு பெரும் விருட்சமாக பரந்து தமிழ் நிழல் பரப்பி தன்னாலான சேவைகளை பெரு முனைப்புடன் முன்னெடுத்து செல்கிறது.

கேசி தமிழ் மன்றம் சமகால சமூக தேவைகளுக்கேற்ப தனது செயற்பாடுகளை உங்களது ஆலோசனைகள் மற்றும் பங்களிப்புடன் முன்னெடுத்து செல்லும் என்பதில் ஐயமில்லை. அந்தவகையில் மாதாந்தம் மூத்த குடிமக்களுக்கான ஒன்றுகூடல், சிறுவர்களுக்கான இசை, நாடகப் பட்டறை, தமிழர் இசைக் கருவியான பறை இசைப் பட்டறை என்பவற்றையும் அவ்வப்போது ஒழுங்கு செய்து ஊக்குவிக்கின்றது.

அதுமட்டுமல்லாது பல தமிழ் அமைப்புக்களுடன் சேர்ந்து பொதுவான நோக்கத்திற்கு பல செயற்திட்ட்ங்களில் ஈடுபடுகின்றது, குறிப்பாக ஹார்வார்டு தமிழ் இருக்கை நிதி திடட்டலிலும் தன்னை ஈடுபடுத்தியுள்ளது.

இதன் ஒரு அங்கமாக கேசி தமிழ் மன்றத்தினால் வருடம் இருமுறை வெளியிடப்படும் இளவேனில் சஞ்சிகையின் 13ஆவது இதழ், தமிழர் திருநாளாம் தைப்பொங்கலில் வெளிவருவதில் நான் பெருமகிழ்வடைகின்றேன்

இவ்விதழானது சிறுவர் முதல் பெரியோர் வரை எம்மிடையே மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவதற்கான ஒரு ஊடகமாக திகழ்கின்றது. இளவேனில் தொடர்ந்தும் வெளிவர உங்களது ஆதரவை வேண்டுகின்றோம்.

எதிர்வரும் காலங்களில் புதிய வழிமுறைகளில் புதுப் பொலிவுடன் திகழ வேண்டும் என்று வாழ்த்துவதோடு தொடர்ந்தும் இளவேனில் மலர்ந்து இளம் எழுத்தாளர்களுக்கு இதமான இடம் வழங்க வேண்டும் என்று வாழ்த்தி அமைகிறேன்.

**சச்சிதானந்தம் சத்தியன்**
**தலைவர்**
**கேசி தமிழ் மன்றம்**

# பெண்

-ராணி தங்கராசா-



"சக்தியின்றி சிவமில்லை" அண்ட சடாட்சரங்களையும் ஆட்டிப் படைக்கும் அரனே சக்தியின் துணையின்றி ஆட முடியாதெனின் பெண்ணின் பொறுப்பையும், அவள் சக்தியையும் சொல்லவும் வேண்டுமா? வீரம், கல்வி, செல்வம் அதிபதிகளாகி முன்னைய நிர்வாகம் செய்பவர்களும் துர்க்கா, லக்குமி, சரஸ்வதி என்கிற முப்பெரும் தேவியரே.

ஒரு ஆண் தன் வாழ்வில் முன்னேறவும், தலை நிமிர்ந்து நிற்கவும், பெருமையுடன் வாழவும், பக்கத்துணை நிற்பவள் பெண்ணே. சரித்திரங்கள், காவியங்களுக்குக் கூட பெருமை சேர்த்தவள் பெண்தான். இராமாயணத்தில் சீதை, மகாபாரதத்தில் திரௌபதி, சிலப்பதிகாரத்தில் கண்ணகி, தன் கற்பின் திறனாலும், புத்தி சாதூரியத்தினாலும் இயமராஜனை வாதில் வென்று, தன் கணவன் உயிர் மீட்டவளும் சாவித்திரிதான். இன்னும் எத்தனை, எத்தனை! நல்லதை உருவாக்குவதும், தீயதை அழிப்பவளும் பெண்தான். இதனால்தான் "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" என்கிறார்கள்.

பெண் உலகின் கண். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு நான்கையும் கொண்டவள். அன்பின் உறைவிடம், பொறுமையின் இலக்கணம்,சுமை தாங்கி என்றெல்லாம் வர்ணிக்கப்படுகின்றாள்.

அரும்பாகி மொட்டாகும் போது, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இவற்றின் துணை கொண்டு தன்னை பாதுகாக்கிறாள். மலராகி தாயாகி ஒளி வீசும்போது அன்பின் உறைவிடமாகவும், பொறுமையின் இலக்கணமாகவும் திகழ்கிறாள். குடும்பப் பொறுப்பை எடுத்ததும் சுமைதாங்கி ஆகிறாள். பள்ளியறை முதல் பரமனடி சேரும் வரை பக்கத்தில் பங்கு கொள்வோம். ஆணும் பெண்ணும் சேர்ந்த நாள் முதல் இறக்கும் வரை எதிலும் சம பங்கு கொள்ள அவன் வாவ்வில் இணைந்த ஒரு தோழிதான் பெண். ஆண் அடக்கி ஆள்பவனுமல்ல. பெண் அடிமையுமல்ல.

பெண்ணிற்கு இயற்கை சில கஷ்டங்களைக் கொடுத்த போதிலும், தாய்மை என்ற தெய்வீக ஸ்தானமும் பெண்ணைச் சேர்ந்த்தே. உலகில் எத்தனை உறவும் ஒருவருக்கு இருக்க முடியும். ஆனால் பெற்றவள் தாய் என்ற உறவிற்கு ஒரே ஒரு பெண்தான். ஒரு தாய் தன் சேயைப் பூமிக்கு கொண்டு வரும்போது மரணவாயிலுக்கே போய் மீள்கிறாள். குழந்தையைக் கண்டதும் சில வினாடிகள் முன் தான் உயிருடன் போராடியதையே மறந்து தன் வேதனைகள் துறந்து உள்ளம் பூரிக்கின்றாள். தாய்மை அவள் நோ தீர்த்த மருந்தாகிறது. "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" என ஔவைப் பாட்டி பொய்யாகவா பாடினார்.

தன் பிள்ளையை நோய் நொடி அற்றவனாக, படிப்பும், பண்பும் உள்ள உத்தமனாக உருவாக்க எத்தனை கஷ்டங்கள், துன்பங்களை அனுபவிக்கிறாள். தியாகங்கள் எத்தனை செய்கிறாள். முறைப்படி வளர்ந்தவனை மற்றோர் போற்றி

புகழும் போது தன் குறைகள், வேதனைகள் எல்லாம் ஆதவன் முன் கரைந்த பனி போலக் கரைய பெற்ற பொழுதினில் அடைந்த சந்தோஷத்திலும் பார்க்க பன்மடங்காக இன்பத்தில் பூரிக்கிறாள்.

*'ஈன்ற பொழிதினிற் பெருதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்' – வள்ளுவன் வாக்கு.*

விஞ்ஞானம் விருத்தியடைந்த இந்நாளில் பெண் ஆணிற்கு சரிசமமாகவே எதிலும் கை கொடுக்கிறாள். ஏர் பிடிப்பதிலிருந்து விமானமோட்டுமளவிற்கு உயர்ந்து விட்டாள். அதுமட்டுமா, கனத்த இயந்திரத் துப்பாக்கிகளை இயக்கி போர் முனையில் பகைவரை விரட்டி விரட்டி சுடுகிறாள். ஆணினால் தான் முடியும் என்ற மடமையை ஒழித்து எதிலும் பெண் ஆணிற்கு சமமானவளே என்றாகி விட்டாள். அன்று பாரதியார் கற்பனையில் உருவாக்கிய பெண் இன்று நிஜத்தில் செயலாற்றுகிறாள்.

பெண் தன் புத்தி வல்லமை, பொறுமை அவற்றால் தன்னை எந்நேரமும் மிஞ்சி விடக் கூடுமென பயந்த சில ஆண்கள் பெண்களை விட ஆண்கள் உடல் வலிமை உடையவர்கள் என்ற ஓர் ஆயுதத்தின் உதவியுடன் பெண்ணின் பாதுகாவலன் தான்தான் என்பதையும் மறந்து பெண்ணை அடக்கி அடிமையாக்கி சில கொடுமைகளைப் பெண்ணிற்கு இழைப்பதால் பெண் அடிமை என்பதல்ல. அதிலும் அவள் தன் அன்பு, பண்பு புத்தியால் குடும்பத்தின் மானம் கெடாமல் அவனை மன்னித்து பணிந்தே போகிறாள். பெண் பொறுமைக்கும் பசுப்போன்றவள் எனினும் எல்லை மீறும் போது சீறும் புலியாகிறாள்.

*மாதர் தம்மை இழிவுசெய்யும்*
*மடமையைக் கொளுத்துவோம்*
*வைய வாழ்வு தன்னில்*
*எந்த வகையினதும் நமக்குள்ளே*
*தாதர் என்ற நிலமை மாறி*
*ஆண்களோடு பெண்களும்*
*சரி நிகர் சமானமாகவே*
*வாழ்வோம் இந் நாட்டினிலே*

பாரதியார் சொன்னபடி ஆண் பெண் சமமென வாழ்வோம்.

# ஔவையார்

**-ஷஹானி-**



ஔவையார் ஓர் சிறந்த பெண் புலவர். அவரை ஔவைப்பாட்டி என்றும் அழைப்பர். அவர் சிறுவர்களுக்கு பல நீதி பாடல்களை இயற்றியுள்ளார். ஔவை கிழவி நம் கிழவி, அமுதின் இனிய சொற் கிழவி. என்ற பாடல் ஔவையாரின் புகழ் பாடும் பாட்டாகும். ஔவையார் இறைவனிடம் பக்தி கொண்டவர். அவரின் பாடல்களை விரும்பி படித்து அதன் வழி நடப்போம். அதியமான் என்னும் அரசன், மிகுந்த அன்பு உடையவர். அவர் தமக்கு கிடைத்த அரிய தொரு நெல்லிகனியை ஔவையாரிடம் கொடுத்தார். நெல்லிக்கனியை உண்டதால் ஔவையார் நெடுங்காலம் வாழ்ந்தார். அவரை என்றும் நாம் போற்றி வணங்குவோம். அவரின் வழி நடப்போம்.


## லக்ஷ்மி

மஞ்சள் வெள்ளை நிறங்கள்
பகலில் என்னை தேடும்
பார்த்து பார்த்து இருக்கும்
பகைத்தும் கொண்டு இருக்கும்
என்னை கண்டால் துள்ளும்
பாய்ந்து பாய்ந்து ஓடும்
பந்தை வாயால் அடிக்கும்
பார்க்காதோர் வந்தால் குலைக்கும்
பாசமான நாய்க் குட்டி
நான் வளர்க்கும் நாய்க்குட்டி

விதுஷிகா

# சிங்கமும் சிலையும்

ஒரு நாள் ராமு தன்னுடைய சிங்கத்தை அழைத்துக்கொண்டு காட்டுப்பகுதிக்கு தேன் எடுப்பதற்காக சென்று கொண்டிருந்தான்.



அப்போது செல்லும் வழியில், ஒரு மனிதன் சிங்கத்தைக் கீழே தள்ளி அதன் மீது நிற்பதைப் போல ஒரு சிலை இருந்தது.



"அதைப் பார்த்தாயா? யாருக்கு அதிக வீரம் இருக்கிறது என்பது இதிலே தெரிகிறது."



நீதி: அனைத்தும் யார் கதை சொல்கிறார் என்று பொறுத்தது.

Harish Umashankar prep

# தமிழ்!

-அம்ரிதா மகேந்திரன்-

*"தமிழின் மேன்மை அதன் தொன்மையில் இல்லை - தொடர்ச்சியில் உள்ளது"*

தமிழ் திராவிட மொழிக்குடும்பத்தின் முதன்மையான மொழிகளில் ஒன்றாகும். தமிழ் மொழி சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கும் மேல் பழமை வாய்ந்த இலக்கிய மரபை கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக, பாடசாலை குழந்தைகள் சிறுவயதில் கற்கும் அகர வரிசையான ஆத்திசூடி ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும், திருக்குறள் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் இயற்றப்பட்டது. அதுமட்டுமின்றி பண்டைத் தமிழில் எழுதப்பட்ட குறிப்பிடத்தக்க காப்பியம், கி.மு 200 முதல் கி.பி 200 காலப்பகுதியை சேர்ந்த சிலப்பதிகாரம் ஆகும். ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஏழாம் ஆண்டுப்புள்ளி விவரப்படி உலகம் முழுவதிலும் தமிழ் மொழி எட்டுக்கோடி மக்களால் பேசப்படுகின்றது. இத்தகைய பழமையையும் சிறப்பையும் கொண்ட தமிழ் மொழியை வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் பேசுவது மட்டுமின்றி அவர்களது சந்ததியினருக்கும் இவ் இனிய மொழியை பேச கற்றுக்கொடுப்பதும் அவசியமாகின்றது.

*"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்"*, என்று மகா கவி பாரதியே தமிழை புகழ்ந்து எழுதியுள்ளார். தமிழர்களாகிய நாம் தமிழை இன்றைய நூற்றாண்டு வரை பேசுகின்றோம் என்பது பெருமைப்பட வேண்டிய விடயமாகும். தமிழர்களுக்கு தமிழ் தாய்மொழி மட்டுமல்ல, அது தமிழர்களின் அடையாளம் ஆகும். அத்தோடு சமூகத்தில் தமிழனாய் இருப்பதில் மிகவும் பெருமிதம் கொள்ளும் அளவிற்கு தமிழர்களின் தரத்தை உயர்த்தி தமிழர்களை பெருமையுற செய்த மொழியும் தமிழாகும்.




தமிழ் தாய்நாடு விட்டு வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் இன்றும் தமிழை வளர்க்க நாம் மிகவும் பாடுபடுகின்றோம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. தமிழை வளர்க்கும் முயற்சியில் நமது சமூகம் தமிழ் பாடசாலைகள், தமிழ் விழாக்கள் மற்றும் தமிழ் ஊக்குவிப்பு போட்டிகள் என பல விடையங்களை வருடம் தவறாமல் நடாத்தி வருகின்றனர். இவற்றில் தமிழ் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கு கொள்கின்றனர். தமிழ் போட்டிகளான பேச்சு, திருக்குறள், எழுத்து, கவிதை, நாடகம், விவாதம் மட்டும் பல விசேட போட்டிகளில் பங்குபற்றி ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை என்பதையும் நிரூபிக்கின்றனர். இருப்பினும் வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் ஆங்கிலத்தை பிரதான மொழியாக பயன்படுத்துவதால் வீடுகளிலும் வெளி இடங்களிலும் தமிழின் பயன்பாடு சிறிது குன்றியே காணப்படுகின்றது. உறவினர் வீட்டுக்கு சென்றாலோ அல்லது தாய்நாடு

சென்றாலோ காலம் முழுவதும் ஆங்கிலத்திலேயே பேசுதல் என்பதும் சாத்தியம் இல்லாத ஒன்றாகும். *"பாம்பு தின்னும் ஊரில் நடுக்கண்டம் நமக்கு"* என்பது போல ஆங்கிலம் கற்பதும் முக்கியமே இருந்தாலும் தமிழர்களாகிய ஒவ்வொருவரும் தமிழை பேச கற்றுக்கொள்ள வேண்டியது எமது கடமையாகும். எழுத வாசிக்க தெரியாவிட்டாலும் அவர்களுக்கு தெரிந்த தமிழில் தினசரி வீட்டில் பேசுவது இன்றைய சந்ததியினருக்கும் அவர்களின் எதிர்கால சந்ததியினருக்கும் பல நன்மைகளை பெற்றுத்தரும். தமிழ் பேசுவது குறைந்து விட்டால் எதிர்கால தலைமுறைக்கு தமிழ் பற்றிய அறிவு இல்லாமலே போய்விடும். ஆகவே தாய்நாடுகளில் தமிழை வளர்ப்பதை விட வெளிநாடுகளில் தமிழ் சமூகத்தில் தமிழை வளர்ப்பதே அவசியமானதாகும்.

*"அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்"* என வள்ளுவரே பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் குறிப்பிட்டுள்ளார். காலப்போக்கில் தமிழ் மொழியை தொலைத்து நமது இளம் தலைமுறைகளை இக்கட்டான சூழலில் தவிக்க விடாமல் இப்போது இருந்தே தமிழ் பற்றை அவர்களின் மனதில் உருவாக்குவது பிற்காலத்தில் எண்ணிலடங்காத நன்மைகளை தரும். ஆஸ்திரேலியா போன்ற பல வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள்களுக்கு தமிழை கற்பதும், தமிழை அவர்களது தலைமுறைக்கு எடுத்து செல்வதும் பிரதான கடமைகளில் ஒன்றாகும். சிறுவயதில் இருந்தே தமிழை பேச கற்று கொடுத்தால் அவர்கள் வளர்ந்து வரும் பருவத்தில் தமிழை பேச இலகுவாக இருக்கும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? கல்வி கற்கும் பருவத்தில் இருந்தே தமிழை பேச பழக்க வேண்டும் அப்போது தான் அவர்கள் பேசும் வார்த்தைகள் மனதில் ஆழமாக நிலைத்திருக்கும். மேலும் பெற்றோரின் தூண்டுதல் மற்றும் கட்டாயத்தின் அடிப்படையில் இல்லாமல் சுய விருப்பத்தில் தமிழை கற்றால் தமிழ் கற்கும் ஆர்வமும் அதிகரிக்கும். பிரதான பாடசாலைகளில் இத்தாலியன், பிரெஞ்சு, ஜாப்பனீஸ் மற்றும் பல வேறு மொழிகளை இலகுவாக கற்கும் தமிழ் மாணவர்களுக்கு, அவர்களது தாய்மொழியான தமிழை கற்பது எந்த வகையில் சிரமமாகும்? வாசிக்க வாசிக்க அறிவு மென்மேலும் வளர்கின்றது அதேபோல தமிழை படிக்க படிக்க தான் அதன் அருமையும் பெருமையும் புரியும் அதோடு அதன் புகழும் வளரும்.

*"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு"* என்பதைப் போல் தமிழ் மொழியை எவ்வளவு அதிகம் கற்கின்றோமோ, அதைவிட பன்மடங்கு புகழையும் நன்மைகளையும் தமிழ் நமக்கும், நமது சந்ததியினருக்கும் மற்றும் சமுதாயத்திற்கும் ஈட்டித்தரும். கல் தோன்றா மண் தோன்றா காலத்தில் தோன்றிய தமிழை வருங்காலத்திலும் பல நூற்றாண்டுகள் கடந்தாலும் பேணிப்பாதுகாப்பது மட்டுமின்றி தமிழின் வளர்ச்சியை மெருகூட்டுவதும் ஒவ்வொரு தமிழனின் அதி முக்கிய பொறுப்பாகும். வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் மட்டுமின்றி உலகின் எந்த மூலையில் தமிழர்கள் வாழ்ந்தாலும் அவர்கள் தமிழை பேசுவதும் கற்பதும் அவசியமாகும். நமது முன்னோர்கள் அரும்பாடு பட்டு தமிழை வளர்த்துள்ளனர், இப் பழமையும் இனிமையும் வாய்ந்த தமிழ் மொழியை வளர்த்து தமிழன் என்ற கர்வத்துடன் வாழ்வோம்.

## மீளத்திரும்பிய நட்பு...

- நித்தியா தர்மசீலன் (தர்மதா) -

தசாப்தங்கள் தாண்டிய நினைவு!

தண்ணீரில் மிதந்துவந்து தரைகாணும் ஓடமாய்

தசாப்தங்கள் தாண்டிய ஞாபகங்கள்!

தத்தி அடி எடுத்து தளிர்நடை தான்பயின்று

அத்திவாரம் தேடி என் ஆரம்பப்பள்ளியில்..

என் சிறிய கிராமமே கூடியிருந்ததுபோல்

அயல்வீட்டுச்சிறுமி, அடுத்தவீட்டுச் சிறுவன்

அதற்கடுத்த வீட்டானும்..

என் அக்கா, என் அண்ணா,

என் பக்கத்து வீட்டு அண்ணா அக்காவும்

எம்முன்னே சீருடையில், எல்லோரும்

சிரித்தபடி!

எனக்குள்ளே மட்டும் ஏதோ ஒரு கலக்கம்!

என் முகத்தில் மட்டும் ஏனோ ஒரு இறுக்கம்!

கைகளுக்குள் கசங்கியது அம்மாவின் தாவணி,

கண்களுக்குள் தெரிந்ததோ கண்ணீரின்

பேரணி!

பக்கத்தில் வந்தாள் பைரவி, நான்

பார்த்தேயிராத புதுச்சிறுமி!

நான்தான் பைரவி! இது என் அம்மா!

ஏன் நீ அழுகிறாய்? என் அம்மா தான்

ஆசிரியை.

உன் பேரென்ன சொல்லு? உன் அம்மா இவர்

தானா?

சின்னக்குரலில் சிலிர்க்க வைத்தாள் என்னை.

கண்ணின் நீரைக் கையால்

துடைத்தெறிந்தாள்.

நட்பெனும் மரத்திற்கு நாற்றொன்றை நட்டாள்.

சுட்டித்தனம் காட்டி என்மனதைத் தொட்டாள்.

அன்றுமுதல் நட்பானோம்! நானும் அவள்

வீட்டின் கன்றானேன்!

ஒரு வீட்டில் விளையாட்டு, ஒரு தட்டில்

உணவோடு

பள்ளி இடைவேளை அவள் வீட்டில் கழியும்.

அவள் அம்மா ஆசிரியை அவளுக்கும்

எனக்கும்,

அவர் சொல்லித் தந்தார் எழுத்தும் கணக்கும்!

போட்டி போட்டதுண்டு, பொறாமை

கொண்டதில்லை.

பாட்டும் கூத்துமாய் பால்யம் ஓடியது.

அவள் நண்பி நான் ஆனேன்,


என் உயிர்நண்பி அவள் ஆனாள்!

பத்தாண்டு காலம் ஒன்றாகத் தொடர்ந்தோம்,

பாசம் பரிவோடு பள்ளி நட்பை வளர்த்தோம்!

உயர்பள்ளிக்காலம் திசைமாறிப் போக

உயிர்நண்பர் பாதை வழிமாறிப் போச்சு!



நகர்ப்பள்ளி தேடி நடைபோட்டாள் பைரவி,

உயிர்த்தோழி பிரிந்தாள் உயர்கல்வி நாடி!

தொடர்ந்தேன் தனிய(ா)ளாய், தொலைத்தேன் மகிழ்ச்சியை

தோற்கவில்லைக் கல்வியில் தொட்டேன் இலட்சியத்தை!

காலம் உருண்டோடக் கனவுகள் பெரிதாக

ஞாலம் சுருங்கியது நம்மவர்கள் புறப்பட்டார்.

கண்திறந்த தேசம்விட்டுக் கனவோடு பயணித்தோர்

கடல் கடந்தார் நிலைகொண்டார்,

கனடாவோ

லண்டனிலோ!

என் பயணம் அதிற்சேர என்பாதை முடிவாக

ஏறினேன் விமானம்! இறங்கினேன் இந்நாட்டில்!

என் நட்பு எங்கோயோ? என் உறவு எங்கேயோ?

எனக்குள்ளே ஏக்கம், என் மண்நினைவின் தாக்கம்!

இரு பத்து ஆண்டுகள் பின்னோக்கிச் செலுத்த

என்னைத்தேடி வந்தாள் "முகநூலில்" நண்பி!

தொழில்நுட்பம் தந்த ஆச்சரியம்!

தொலைத்த நட்புத் தேடிவந்த மைல் தூரம்!

கனடாவில் வாழ்கின்றாளாம் கணவன் குழந்தையுடன்.

கனவில் கூட நான் இடையிடையே வருவதுண்டாம்.

கதை கேட்டாள்! கதை சொன்னாள்!

கலகலத்துச்சிரித்தாள்!

கல்விக்காலத்தின் கனவுகளை மீளவைத்தாள்!

மீளாத பால்யத்தை மீட்ட நினைவுகளில் மீண்டும் சிலிர்ப்பு!

காலப் பெருவெளியில் கடந்துபோன இடைவெளியின்

கதைபேசிக் கதைபேசிக் கண்களுக்குள் கனவு!

ஞாலம் இவ்வளவா? நான் நினைத்தேன் பெரிதென்று.

ஞாபகங்கள் திரும்பிவர நாட்கள் மீண்டுவர

மீளத்திரும்பியது நட்பு மீண்டும் துளிர்விட்டு!

ஞாபகங்கள் திரும்பிவர நாட்கள் மீண்டுவர

மீளத்திரும்பியது நட்பு மீண்டும் துளிர்விட்டு!


# எனது பாடசாலையில் விளையாடு போட்டி

கார்த்திகை மாதத்தில் பாரதி பள்ளி விளையாட்டு போட்டியை நடாத்தியது. கம்பர், வள்ளுவர், இளங்கோ ஆகிய இல்லங்கள் பங்கு பற்றின. ஓட்டப் போட்டிகள் நீளம் பாய்தல், உயரம் பாய்தல், குண்டு எறிதல், பழம் பொறுக்குதல், கயிறு இழுத்தல் போன்ற பல போட்டிகள் நடந்தன. வினோத உடைப் போட்டி போன்ற சிறுவர் விளையாட்டுகளும் இடம் பெற்றன. பெற்றோர்களும், வளாக அதிபர்களும் ஆசிரியர்களும் உதவிகள் செய்தார்கள்.

உணவுப் பொருட்களும், குடிபானங்களும் விற்பனை செய்யப்பட்டன. பெற்றோர்களுக்கான ஓட்டப் போட்டியும், சிறுவர்களுக்கான சங்கீதக் கதிரையும் இடம் பெற்றன. இறுதியாக போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

அஷ்வின்
மணிவண்ணன்

5ம் ஆண்டு



## அன்னையும் அன்னை மொழியும்!!!

எழுத்துகளுக்கெல்லாம் முதன்மை
அகரம!!

உறவுகளுக்கெல்லாம் முதன்மை
அன்னை!!!

மொழிகளுக்கெல்லாம் முதன்மை, நமது
அன்னை மொழி, தமிழ்!!!!!

— மிதுனா கார்த்திக்
அவ்வை தமிழ் பள்ளி
மெல்பேர்ன்

## புத்தகப் படிப்பை மின்னூல் புத்தகப்படிப்பிற்கு மாற்றுவது நமக்கு நன்மையை ஏற்படுத்துகின்றதா?

**-விசாகன் பசுபதிதாசன்-**

முன்னோர் காலங்களிலிருந்து தற்போதைய நாள் வரை நாம் காகிதமும் புத்தகமும் தான் பாவித்து வருகின்றோம். படிப்பில் மட்டும் அல்ல, வேலைகளிலும் பொதுவாக இப்புத்தகங்கள் பாவிக்கப்படுகின்றன. ஆனால், நாம் புத்தகப் படிப்பை மின்னூல் புத்தகப்படிப்பிற்கு மாற்றுவதற்குத் தயாரா?


புத்தங்கள் நாம் படிப்பதற்கு உதவியிருக்கின்றது. ஆனால் மின்னூல் புத்தகங்கள் படிக்க எளிமையாகின்றன. கனமான புத்தகங்களை தூக்கி பாடசாலைக்கு செல்வதை விட ஒரு கணணியை எடுத்துச் செல்வது எளிமையானது. மற்றும் வேறு வேறு பாடங்களுக்கு வேறு வேறு புத்தங்களை கொண்டு செல்வதன் அவசியம் இல்லை. ஒரு கணனி மூலமே எல்லாப் பாடங்களுக்கு ஏற்ற புத்தங்களை அதனூடாகப் பாவிக்கலாம்.

ஆனால் சில நன்மைகள் இருந்தாலும் அது போல தீமைகளும் உண்டு.சில பிள்ளைகள் படிப்பு என்ற பெயரில் திரைப்படங்களும் கணனி விளையாட்டும் விளையாடுகிறார்கள். இதன் காரணம் கணனி தான். அவர்களுக்கு கணனியில் வரம்புகள் இல்லை. அது அவர்களை படிப்பு தவிர வேறு வேலைகளுக்கு பயன்படுத்த தூண்டும். இதனால் இது அவர்களின் படிப்பை மிகவும் பாதிக்கும். ஆனால், புத்தகப்படிப்பு இது போல் தீமையான பாதையில் செல்ல அனுமதிக்காது. எல்லைகள் இருப்பதன் காரணத்தால் பிள்ளைகளை படிக்கத்தான் தூண்டும்.

காலங்கள் மாறிக்கொண்டு இருக்கின்றன. நவீன தொடர்பாடல் சாதனங்கள் நமது வாழ்க்கையை எளிமையாக்குகிறது. அதனால், நாமும் இந்த மாற்றத்துடன் செயல்படுவது தான் சிறந்த யோசனை. மின்னூல் புத்தகப்படிப்பிற்கு தீமைகளும் உண்டு. ஆனால், அது நமக்கு ஏற்படுத்தும் நன்மைகளுடன் செயல் போடுவதுதான் திறமையானது.

***இளவேனில் சஞ்சிகைக்கான ஆக்கங்களை***
***அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :***


Casey Tamil Manram
PO Box 2516,
Fountain Gate,
Vic 3805
**மின்னஞ்சல்:** editor@caseytamilmanram.org.au




–ராதிகா சுரேஷ்-

## ஊனமிங்கே மனதில் இல்லை...

-சியாமளா யோகேஸ்வரன், பிறிஸ்பேன்-

அந்தக்காலத்தில எண்டு தொடங்கினாலே மனம் முண்டியடித்துக் கொண்டு ஓடுறது பள்ளிக்கூடக் காலத்துக்கும் பாதிச்சட்டையைப் போட்டுக் கொண்டு கவலையற்றுத் திரிஞ்ச காலத்துக்கும் தான். உண்மையில அது ஒரு அழகிய கனாக்காலம். பொத்தி வைத்த மயில் சிறகை ரகசியமாய்த் திறந்து பார்க்கும் குழந்தை போல அந்தக் குழந்தைப்பருவத்து நினைவுகளைத் தட்டிப்பார்க்கேக்கை வர்ற சந்தோஷமே தனிதான்.

பள்ளிக்கூடம் போறதெண்டா அது எப்பவுமே வேப்பங்காய்தான். அதுவும் அந்தோணிச் ரீச்சர் கையெழுத்தை திருத்தியே எங்கட தலையெழுத்தை மாத்திக் காட்டுறன் எண்டு சத்தியப்பிரமாணம் செய்தது போல பந்தி பந்தியாப் பார்த்து எழுதச் சொல்லிட்டு நித்திரை கொள்ள, நாங்கள் வட்டமா கால் கடுக்க நிற்கிறதெண்டா யாருக்குத்தான் பள்ளிக்குப் போகப் பிடிக்கும்? காலையில எழும்பி லைட் இல்லாத காலத்தில பல்லைத் தேய்க்கிறன் எண்டு கதை விட்டுட்டு சாரையாப் போற எறும்புக்கூட்டத்தைத் தடையொன்றை வைத்துக் கொஞ்சம் குழப்பிப் பாக்கிறது ஒரு பொழுது போக்கு. ஆனா அதுகள் நான் வைக்கிற எல்லாத்தையும் தாண்டி மிலிட்டரி ஒழுங்கில வரிசையாப் போறது கூட ஒரு அழகுதான். இல்லையெண்டா புதுசா ஆடு போட்ட குட்டியைத் தூக்கி வைச்சுக் கொஞ்சிக் கொண்டிருக்கிறது. அதுவும் அம்மாட்டப் பாலைக் குடிச்சிட்டுப் அந்தப் பால் வாசம் போகாத குட்டி ஆட்டைக் கொஞ்சுறதுக்குக் காரணம், நாங்களே அம்மாட்ட பால் குடிச்ச ஒரு சந்தோஷம் வரும் எண்ட ஒரு தவனம் தான்.

அது கொஞ்சம் வளர்ந்துட்டுது எண்டா, கண்ட புல்லையும் திண்டுட்டுப் போதாததுக்கு ஒரு ஏவறை வேற விடும். அப்பப்பா அந்த புல்லு நொதிச்ச மணத்தை உள்ள இழுத்திட்டா இரண்டு நாளைக்கு எதைச் சாப்பிட்டாலும் அதுதான் நினைவுக்கு வந்து சாப்பிடுற ஆசையைப் போக்காட்டிப் போடும். ஆனா ஆட்டை விட எனக்குச் சரியான ராசி கோழியோடதான். எப்ப பார்த்தாலும் அம்மா கோழிக்கு முட்டை வச்சு வீட்டில எப்பவும் கோழிக்குஞ்சுகள் உலாவிக் கொண்டிருக்கும். அதை மேய்க்கிறேன் எண்டு கற்றப்போலை வைச்சுக் கொண்டு, பெரிய கறுப்புப்பூனைப் படை போல கோழியைச் சுத்திக் கொண்டு நாங்கள் திரிவம். தாய்க்கோழி திட்டியிருக்கும் "இவங்கள் என்னத்துக்கு எனக்கு முன்னாலயும் பின்னாலயும் திரியுறாங்கள் எனக்கு என்ர குஞ்சைப் பார்த்துக் கொள்ளத் தெரியும் தானே எண்டு". ஆனா நாங்களும் விடாமல் அலப்பறை பண்ணிக் கொண்டு பின்னாலயே திரிவம்

அப்பிடி கோழி மேச்ச காலத்தில [வாய் பார்த்த நேரத்தில] பருந்து ஒண்டு ஒரு குஞ்சைத் தூக்கிக் கொண்டு போக, தாய்க்கோழி மற்றக்குஞ்சுகளைத் தன்ர சிறகுக்குள்ள பொத்தி வச்சுக் கொண்டு "யாராவது காப்பாத்துங்களேன்" எண்டு அபயக் குரல் எழுப்ப ஹீரோ மாதிரி பாய்ஞ்சு காப்பாத்த வேண்டிய நான் "பெப்பே" எண்டு முழிக்க, குசினிக்குள்ள இருந்து பாய்ஞ்சு வந்த அம்மா முன்னால இருந்த கல்லைத் தூக்கிப் பருந்துக்கு எறிய, அது குஞ்சைக் கீழ போட்டுட்டுப் போக, அது இப்பவும் மறக்க முடியாத மாதிரி ஒரு நிஜ சினிமாவை நேரில பாத்த ஒரு பீலிங். ஓடிப்போய்க் குஞ்சைத் தூக்கிப் பாத்தா அதுக்குக் காலில காயம். பார்த்த உடனேயே

அம்மா டொக்டர் மாதிரிச் சொல்லிப் போட்டா, “இது இனி நடக்காது எண்டு”.

கோபம் வந்தாப் பொடியளுக்குப் பேசேக்கே நாய், எருமை, கழுதை எண்டு பேசுற அம்மா இந்த ஐந்தறிவு விலங்குகளிட்டை மட்டும் மனிசரோட கதைக்கிறது மாதிரிப் படுபிரியமாக் கதைப்பா. சிலவேளை எனக்கே ஒரு சந்தேகம் வரும்– நாங்கள் பிள்ளைகளோ அல்லது இதுகள் பிள்ளைகளோ எண்டு. அந்தக் கோழிக்குஞ்சுக்கு அம்மா செஞ்ச முறிவு வைத்தியத்தில அது ஒரு பக்கமாக சாய்ஞ்சு கொண்டு படுத்தபடி சாப்பிட்டு, பிறகு நிண்ட இடத்தில எழும்பி நிண்டு சாப்பிட்டுப் பிறகு மெதுவா நடக்கத் தொடங்கிட்டுது.



இந்த ஐந்தறிவு ஜீவன்களுக்குள்ளயும் சீனியோரிட்டி எண்டது ஒண்டு இருக்குதெல்லோ. கழுத்தில மயிருமில்லாம நொண்டியடிக்கிற இந்தச் சேவலை எல்லாச் சேவலும் சேர்ந்து கொத்துது எண்டு அம்மாதான் அதுக்கு பொடிகார்ட் வேலை பாத்துத் திரிஞ்சவா. எந்தக்கோழியாவது சண்டித்தனத்துக்கு வந்தா, அம்மாட்ட இரண்டு வாங்காமப் போக மாட்டினம். “நொண்டியோட என்ன வீரம்” என்பது அவவிண்ட வாதம்”. பெட்டைக்கோழிகள் அவரை ஒண்டும் செய்ய மாட்டினம். அதுகளுக்கும் எங்கட கலாச்சாரம் தெரிஞ்சிருக்கவேணும். சாண் பிள்ளையெண்டாலும் ஆண்பிள்ளையெண்ட மரியாதையைக் கொடுத்திச்சுதுகள். ஒரு மாதிரி சீனியராய் இருந்த வயதான சேவல் தானா மண்டையைப் போட்டுச்சோ அல்லது அம்மா எங்களுக்குத்தெரியாம சட்டிக்குள்ள வைச்சுட்டாவோ தெரியாது. இந்த நொண்டிச்சேவலிட்ட தலைமைப்பொறுப்பு வந்து சேர்ந்துட்டுது. அந்த நொண்டிக் காலை வைச்சுக் கொண்டு அத்தனை பொம்பிளைகளுக்கும் அவர் தான் ராஜா எண்டு, இந்த நோஞ்சான் சேவல் பண்ணுற அலப்பறையைத் தாங்க முடியாது. அவர் மனசு வைச்சால் தான் அவரிட ஜீனியர்சுக்கு இடம். தான் நிற்கிற இடத்தில ஒரு சேவலையும் நிற்கவே விடாமல் கொத்தித் துரத்திப் போடும். தன்ர அழகை எல்லாரும் ஒப்பிட்டுப் பாத்திடுவாங்களோ எண்டு உள்ளுக்குள்ள ஒரு பயம் இருந்திச்சோ தெரியாது.

நாங்கள் முட்டை போடக் கடகம் வைச்சு, அதில துணியையோ அல்லது வைக்கோலையோ போட்டு வச்சிருப்பம், ஆனா, தான் எடுவை காட்டுறதுக்கு பொம்பிளையளை வீட்டுக்குள்ள கூட்டிக் கொண்டு வந்து எங்கட புத்தகத் தட்டு, துணி வைக்கிற அலுமாரி எண்டு அத்தனையிலயும், தான் ஏறிப்பார்த்துப் படுத்து இடம் காட்டுவார். பொண்டுகளும் சும்மா ஆக்கள் இல்லை, அந்த இடம் பிடிக்கேல்ல எண்டு சொன்னா, அவரும் சளைக்காம குசினிக்குள்ளயும் கொண்டு போய் இடம் பிடிச்சுக் காட்டுவார். முதல் நாள் சமைச்ச அடுப்புச் சாம்பலுக்குள்ளயும் புகுந்து படுத்துப்பார்ப்பார். அம்மா திட்டுவா, “இப்பிடியே அடுப்பைப் பத்த வைச்சன் எண்டா முட்டை போட இடம் காட்டாமலேயே போய்ச் சேர்ந்துடுவாய்”

எண்டு. இவர் இப்பிடிப் பார்த்துப் பார்த்துச் செய்ய, இந்தப் பொண்டுகள் கிட்டக் கூட வந்து பார்க்க மாட்டினம். தூரத்தில இருந்து பார்த்தே ரிஜெக்ட் பண்ணிடுவினம். அட இந்தக்கோழிப் பொம்பிளையளும் நாங்கள் செய்யிறதைத்தான் செய்திருக்கினம் எண்டு இப்பத் தானே விளங்குது.

இப்பிடிச் சுத்திச் சுத்திப் பாத்துட்டு, கடைசியாப் போய் முட்டை போடுறது என்னமோ அதே கடகப் பொட்டிக்குள்ளதான். ஆனா சீன் போடுறது எண்டா நம்ம நொண்டி ராஜாவைத்தான் கேட்க வேணும். அதுவும் அதோட விட மாட்டார், முட்டையைப் போட்டுட்டு அம்மணி அன்னநடை போட்டுக் கொண்டு வெளியில வருவா பெரிய மகாராணி மாதிரி. பார்த்த உடன இவர்தான் " வந்திட்டா, வந்திட்டா முட்டை போட்டுட்டு" எண்டு முதல்ல கொக்கரிக்கத் தொடங்குவார். பிறகு என்னமோ பெரிய வேலை பார்த்துக் களைச்ச மாதிரி அவையளும் தொடங்குவினம். பிறகு வரிசையா எல்லாரும் சேர்ந்து கோரஸ் பாடுவினம். யோசிச்சுப் பாருங்கோ காலமை ஒரு எட்டு மணிக்கு இவையிண்ட இந்தப் படம் தொடங்கினா பத்துப் பொட்டையளுக்கும் இது வரிசையா நடக்க, ஒரு பதினொரு மணியாவது ஆகும். பாடமாக்க தொடங்கிற குணசீலன் சேரிட பொட்டனியும் மண்டைக்குள்ள போகாது, சுத்தமா மண்டையில் ஏறாத சூரி சேரிட பிசிக்ஸ்சுக்கும் வழி கிடைக்காது. பிறகு ஒரு தடியை எடுத்துக் கொண்டு கோபத்தில நான் அவையளை ஓட ஓடத்துரத்தத் தொடங்குவன். அதுகள் எங்க கேட்டாத்தானே. போதாததுக்கு எங்கட அம்மா வேற அவையளுக்கு வக்காலத்துக்கு வந்திடுவா. நாங்கள் தண்டம், அதுகள் முட்டையாவது போடுதுகள் எண்ட ஒரு மறுக்க முடியாத உண்மையும் அங்க இருக்குதெல்லே? இத்தனைக்கும் அடிப்படைக்காரணமான நொண்டியர், எப்பிடி எனக்குப் பரம விரோதியானார் எண்ட கதையிட சுருக்கம் இதுதான்.

இவர் உள்ளுக்குள்ள இப்பிடி மினக்கெட, மற்றப்பேடுகளுக்கு வெளியில விலாசம் காட்டிக் கொண்டிருப்பார் வெள்ளைச்சேவல் என்று அழைக்கப்படும் அவரிட ஜீனியர். எல்லாத்தையும் கவனிச்சுக் கொண்டு இருந்துட்டு, முட்டை போட செட் பண்ணிக் கொடுத்திட்டு, வெளியில வந்து ஓட ஓடத் துரத்தி ஒரே கொத்துத்தான் அத்தனை ஜூனியர்ஸ்க்கும். கழுத்து வெட்டிக் கோழி எண்டாலே கொஞ்சம் மெல்லிசுதான் அதிலயும் காலும் சரியா ஏலாததோட, பெரிய கொண்டையோட அசப்பில ராஜா மாதிரி இருக்கிற வெள்ளைச் சேவலைத் துரத்துற விதத்தைப் பாத்தா ஊனம் எல்லாம் உடம்பிலில்லை எண்ட தத்துவத்தை அது அந்தக் காலத்திலேயே சொல்லித் தந்திருக்குது எண்டுதான் நினைக்கிறன். அதுவும் இறக்கையைப் படபடவெண்டு அடிச்சுக் கொண்டு வெள்ளை ராஜா குரலெடுத்துக் கூவத்தொடங்க நம்ம நொண்டிராஜாவுக்குப் பிடிக்காது. பாய்ஞ்சு துரத்தத் தொடங்க, கூவிமுடிக்காமலேயே குரல் அமுங்கிப் போக பிடரியில தலை அடிபடுற அளவுக்கு விட்டாப்போதும் எண்டு தப்பியோடுற ராஜாச்சேவலைப் பாக்கேக்க சிரிப்புத்தான் வரும்.

நாங்கள் சிரிக்கிறதும், பொட்டைக் கோழிகள் மதிக்காததும் எண்டு வெள்ளை ராஜாவுக்குக் கௌரவப்பிரச்சனை வர்றப்போ அவர் பலப்பரீட்சைக்குப் போய், கொண்டை கிழிஞ்சு தொங்கி, ரத்தம் ஓடுற அளவுக்குச் சண்டையும் நடந்திருக்குது. அதுவும் வானத்தில பாய்ஞ்சு பாய்ஞ்சு ஊரைக்கூட்டி வைச்சுப் பெருஞ்சண்டை. பார்க்கப்பொறுக்காம நாங்கள் ஓடிப் போய்ப் பிடிச்சு விட்டாலும் அடங்க மாட்டுதுகள் அதோட அம்மாவும் சொல்லிப்போடுவா "இது தலைமைப் பதவிக்கான குடுமிச்சண்டை. அவையளை விட்டுவிடு- கொத்தி அடங்கட்டும் எண்டு". அட அங்கயும் அதுதானா நடந்திருக்கு- நம்மளுக்குத் தான் அப்ப விசயம் தெரியாமப் போச்சோ.

கடைசியில ரத்தம் சொட்டச் சொட்ட வெற்றி வாகை சூடுறது என்னமோ இந்த நொண்டிச் சேவல் தான். பொம்பிளையள் உடன அவரைச் சுத்திக் கொண்டு வர ஒரு வெற்றிக் கர்ஜனைக் கூவல் ஒண்டு போடுவார் பாருங்கோ. பார்க்க ஆயிரம் கோடிக் கண் வேணும். கொத்து வாங்கின சேவலுக்கு அம்மா திட்டித் திட்டி மருந்து போட்டு விடுவா. "ஆறடிக்கு வளரந்ததுதான் மிச்சம், ஒண்டுக்கும் பிரயோசனம் இல்லை" எண்டு திட்டியிருப்பாவோ தெரியேல்ல. நம்ம வெள்ளை ராஜாவுக்கும் ரோசம் வந்திருக்குந் தான், ஆனா என்ன செய்யிறது, இந்த நொண்டிச்சேவலை விழுத்த வழியேயில்லை எண்டு புலம்பிக்கொண்டு, சரியான ஐடியா ஒன்றைத் தேடிக்கொண்டு திரிஞ்சிருக்கும்.

விழுத்துறதுக்குச் சரியான வேளை வந்தது போல ஒரு நாள் எல்லாக் கோழிகளும் கூட்டுக்குள்ள இருந்து வெளியில வந்திட்டினம், ஜூனியர் ராஜா வேற வெளியில தன்ர விலாசத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறார். எனக்குச் சரியான அதிசயம் "என்னடாப்பா நம்ம நொண்டி ராஜாவை இன்னும் காணேல்லயே" எண்டு. சரியெண்டு கூட்டுக்குள்ள போய்ப்பார்த்தா அங்க அவருக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லப் போல, அரைக்கண்ணை மூடிக்கொண்டு ஒரு தூக்கத்தில இருந்தார் நம்ம ராஜா. எவ்வளவுதான் கோபமிருந்தாலும் உள்ளுக்குள்ள எனக்கு ஒரு தனி மரியாதை அவரில எண்டபடியால கவலையோட மெதுவாத் தூக்கிக் கொண்டு வெளியில வந்தன். வழமை போல அம்மா முள்முருக்கைப்பட்டையும் மஞ்சளும் சேர்த்து அரைச்சு, வாயைத் திறக்க மாட்டன் எண்ட கோழியை அமுத்தி வாயைத் திறக்க வைச்சு கட்டாய மருந்து பருக்கினா. வாய் மட்டும் இருந்திருந்தா, அம்மாவைக் கண்டபடி திட்டித் தீர்த்திருக்கும் எண்டு நினைக்கிறன்.

அதைக் கொஞ்சம் தன்ர பார்வையில விடுறது சேப்டி எண்டு, அவ குசினிக்குப் பக்கத்தில அம்மிக்கரையோட விட்டு வைச்சா. பாவம் அதுக்கு அசையக்கூட முடியேல்ல. ஆனா நம்ம வெள்ளை ராஜா எதிர்பார்த்துக் கொண்டிருந்த தருணம் இதுதானே? அவர் அம்மா குசினிக்குள்ள இருந்த நேரம் பாத்து, நடக்கக் கூட முடியாம இருந்த இந்த நொண்டி ராஜாவைப் பாய்ஞ்சு பாய்ஞ்சு ஏதோ வீரசாகசம் செய்யிற நினைப்பில கொத்தித் தள்ள ரத்தம் கொட்டுது நம்ம வீரனுக்கு. நான்தான் பாத்திட்டு ஓடி வந்து வெள்ளை ராஜாவைத் துரத்திப் போட்டு அதைக் கொஞ்சம் தடவி விட்டன். எதிரி எண்டு இருந்த நானே இப்ப நண்பனாயிட்டன், ஆனா "நீங்கள் தான் எல்லாம்" எண்ட மாதிரிக் காதல் வசனம் பேசி நடிச்சுக் கொண்டிருந்த பேடுகள் என்ன செய்திச்சினம் தெரியுமே. ஏலாத மனிசன் எண்டும் பாக்காம தாங்களும் தங்கட பங்குக்கு இரெண்டு கொத்துப் போட்டுட்டு புதுசாப் பொறுப்பெடுத்த ராசாவுக்கு விசுவாசமா அவரோட ஊர் சுத்தக் கிளம்பிட்டினம். அதுக்குப் பிறகு அம்மா அவரைக் கொண்டு வந்து அடுப்போரமா அடுப்புச் சூட்டோட தனக்குப் பக்கத்தில பத்திரமா வச்சுக்கொண்டா.

பின்னேரம் மட்டும் பாத்திட்டு, அம்மா தன்ர அடுத்தபடியான வைத்தியமாய் ரெற்றாசைக்கிளின் குளிசையைக் கொஞ்சம் பருக்கி விட்டா. மிருகவைத்தியம் மனிச வைத்தியம் எண்டு சகலகலாவல்லி எங்கட அம்மா. அதோட இருட்டியும் போட்டுதுதானே எண்டு கூட்டுக்குள்ளயும் விட்டு விட்டா. பழைய பகையைத் தீர்க்கிறன் எண்டு அங்கயும் பழிவாங்கல் படலம் தான். சத்தம் போட்டு அனுங்கக் கூடத் தெம்பில்லாத நம்ம நொண்டி ராஜாவை அம்மா வெளியில கொண்டு வந்து வைச்சிட்டு நல்லா இருட்டினதுக்கு பிறகு வெள்ளை ராஜாவுக்கு இனிமேல் கண் தெரியாது தானே எண்டு, படுக்கேக்கதான் உள்ள கொண்டுபோய் விட்டு விட்டவா. படுக்கேக்க ஏதோ தன்ர பிள்ளையில

ஒண்டுக்கு வருத்தம் எண்டது மாதிரி ஒரே புலம்பல். ஒரு போத்தல் நல்லெண்ணை வாங்கிப் பக்கத்தில இருக்கிற வைரவருக்குத் தாறன் எண்டு நேர்த்தி வேற வைச்சுப் போட்டு, அவர்தான் எல்லாத்துக்கும் காவல் எண்டு சொல்லி, நொண்டி ராஜாவுக்காக வேண்டிக் கொண்டார். ஆட்டுக்கும் கோழிக்கும் எண்டு அம்மா அதுவரைக்கும் ஆயிரம் தரம் பக்கத்தில இருக்கிற வைரவருக்கு நேர்த்தி வைச்சிருப்பா, ஆனா, செய்து முடிச்சாவோ எண்டு மட்டும் கேட்டுப் போடாதேங்கோ. இந்த மனிசி சும்மாதான் சொல்லுறது எண்டு வைரவருக்கே நல்லாத்தெரியும்,

அவரிட வேண்டுதல் பலிச்சுதோ அல்லது எதையும் தாங்கும் ராஜா எரித்தாலும் சாம்பலில் இருந்தும் உயிர் பிழைச்சு வருவன் எண்டு காட்டுறதைப் போலவோ காலையில கூட்டிட கதவைத் திறக்க முன்னமே நம்ம நொண்டி ராஜாவோட கூவல் கேட்டது எண்டு அம்மா சொல்லிப் போட்டா. கூட்டைத் திறந்து விட்ட ஐந்தரை மணி இருட்டில, கண்ணைக் கூசிக்கொண்டு, வெளியில வந்து விளக்கு வெளிச்சத்தையும் சிவந்து கொண்டிருக்கும் சூரியனையும் பார்த்துச் சந்தோசத்தில சிறகுகளை அடிச்சு ஒரு பெரிய கூவல் போட்டார். எனக்கு வழமையா வாற கோபம் ஏனோ அப்ப வரேல்ல. நம்ம ராஜா சுகமாயிட்டார் எண்ட சந்தோசமும்,:"அடத் தொலைந்தார் இண்டைக்கு நம்ம ஜூனியர் ராஜா" எண்டு வெள்ளை ராஜாவில பரிதாபமுந்தான் தோன்றிச்சு.

பதுங்கிப் பதுங்கி கூட்டில இருந்து வெளியில வந்து, நொண்டி ராஜாவின் கண்ணில் படாமல் தப்பியோடப்பாத்த வெள்ளை ராஜா வசமா மாட்டிக் கொண்டார். அந்த இருட்டிலும் பாய்ந்து பாய்ந்து இவர் கொத்த வழமை போல் அவர் தப்பியோட ஒரே சிரிப்புத்தான். "வலியவன் எப்போது நலிவான் சீண்டிப் பார்க்க" என்று எத்தனை பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள் பார்த்தீர்களா? இத்தனை கோபமும் அவருக்கு வெள்ளை ராஜா மேல் மட்டும் தான் தன்னைக் கொத்திய, முதல் நாள் தன்னை ஏனென்றும் சீந்தாத விசுவாசமேயில்லாத அம்மணிகள் மேல் அவருக்கு எந்தக் கோபமுமில்லை. வழமை போல அவ்வளவு பேரையும் கூட்டிக் கொண்டு உலாக் கிளம்பினார் நம்ம நொண்டி ராஜா. அவருக்குப் பின்னால பெரும்பவ்வியத்தோட அத்தனை பொம்பிளையளும் மெல்ல நடை பயின்று நடந்திச்சினம். பாவம் நம்ம ஒரு நாள் ராஜாவைக் கண்ணிலேயே காணக் கிடைக்கேல்ல. வழமை போல கிடுகு ஓட்டைக்குள்ளால புகுந்து சேவல் இல்லாத பக்கத்து வீட்டில போய் தன்ர தர்பாரை நடத்திக் கொண்டிருப்பார் எண்டு நினைச்சுக் கொண்டன்.

நொண்டி ராஜாவுக்காகப் பரிதாபப்பட்ட எனது பீலிங்கை மாத்த வைச்சு, அடுத்த ஒரு மணித்தியாலத்தில தன்ர வழமையான டியூட்டியைத் தொடங்கி, நொண்டிராஜா பழையபடி எனக்கு எதிரியான கதை ஒண்டும் புதிதில்லை. ஆனால் வாழ்க்கையில ஊனத்தைத் தாண்டியும் சாதிக்கலாம் என்பதையும், நடப்பவை யாவும் நல்லதுக்கே என்று எடுத்துக் கொண்டு, வாழ்க்கையில இதெல்லாம் சகஜமப்பா என்றதுமாதிரி எல்லோருடனும் பழக வேணும் எண்ட ஒரு பெரிய பாடத்தைக் கத்துக் கொடுத்தவர் நம்ம நொண்டிராஜா தான் என்பதில் இந்தச் சேவல்ராஜா என்றென்றும் என் நினைவில் நிலைத்து நின்று கொண்டிருப்பார்.

## நமது பூமியை நாமே காப்போம்!

*இவன் பாட்டன் பயிர் செய்த இந்த பசுமையான பூமி*
*இன்று பாட்டனும் இல்லை பசுமையும் இல்லை*

*அன்று பாத்தி கட்டி பயிர் செய்த பூமி*
*இன்று பாலைவனமாய் காய்ந்து கிடக்க*

*பாட்டனின் வாரிசு பயிர் செய்ய வருமென*
*ஏங்கித்தவித்தது இந்த வறண்ட பூமி*

*பேரன் வந்தான் வெளிநாட்டில் இருந்து*
*பேரம்பேசி அதை பங்கு போட்டு விற்றான்*

*தோட்டங்கள் அழிந்தன*
*தொழிற்சாலைகள் உருவாகின*

*தொழிற்சாலைக் கழிவால் எங்கும்*
*தொற்று நோய்கள் பரவின*

*நமது வளங்கள் அழிந்து போகாமல்*
*நமது பூமியை நாமே காப்போம்.*

**-காயத்திரி திவாகர் -**

## கிரிப்டோ பணம் என்றால்...



கிர்ப்டோ என்பது "ஒழிந்த இரகசியம்" என்று அறியப்படும். இது பாதுகாப்பான முறையில் இணைய பரிவர்த்தனை செய்யும் நோக்கிற்காக உருவாக்கப்பட்ட (டிஷிட்டல்)பணம் ஆகும். இதனை ஒரு குறிப்பிட்ட நாட்டின் அரசோ அல்லது மத்திய வங்கிகளோ வெளியிடுவதும் இல்லை, நெறிபடுத்துவதும் இல்லை. இதன் ஆக்கத்தை தனியார் நிறுவனங்களே முழுமையாக கட்டுபடுத்துகின்றன.

பொருளாதார விதிமுறையின் படி, இதன் வழங்கலை உலகச்சந்தையில் கட்டுபடுத்துவதால், பணத்திற்கான கேள்வி அதிகமாகும்போது அதன் பெறுமதியும் அதிகமாகிறது."சந்தோஷி நாக்கமோட்டோ" என்ற அடையாளம் தெரியாத நபர் அல்லது நபர்களால் உருவாக்கப்பட்ட இவ்வகையான முதல் பணம் பிட்கொயின் ஆகும். இதுவே இன்றும் முதன்மை பெற்று விழங்குகிறது. இதன் ஓர் அலகின் பெறுமதி சுமாராக இருபதினாயிரம் அவுஸ்ரேலிய டொலர்களை தாண்டியுள்ளது.

இன்று சுமாராக ஆயிரத்திற்கும் மேற்மேற்பட்ட இவ்வகையான பணம் உலக சந்தையில் உருவாக்கப்பட்டுள்ளது. ரிப்பிள், எதீரியம், பிற்கொயின் காஸ், கடானோ போன்றவை வேறு பிரசித்திபெற்ற வகைகள் ஆகும். இப்பணத்தின் வீழ்ச்சி உலக பொருளாதார சந்தையில் மிகப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் நம்பப்படுகிறது.

## ஒரே நாளில்.. விளையாட்டும்! விபத்தும்!

கிரேட் சேனை நோக்கி நான், அம்மா, அம்மம்மா, மாமா அனைவரும், எமது சிற்றுலாவை ஆரம்பித்தோம். போகும் வழியில விளையாட்டு மைதானங்கள், வீடுகள், கட்டடங்களைப் பார்த்து நாங்கள் மகிழ்ந்தோம். அதன் பின்னர் நாங்கள் அங்கே சிறிய ஒரு பகுதியில் விளையாடி மகிழ்ந்தோம்.

சிறிது நேரத்தின் பின்னர் கடற்கரையில் நானும் அம்மாவும் மண்ணைத் தோண்டி நண்டைப் பிடித்தோம். பிறகு நாம் அங்குள்ள மலைகளுக்குச் சென்றோம், அனைவரையும் நான் ஒரு படம் எடுத்தேன். பின்னர் நான் அந்த கடற்கரையில் குளித்தேன். எல்லோருக்கும் பசி எனது அம்மம்மா கையும் சுவையான உணவை எடுத்து வந்தார். முடிவில் நாம் உடைந்த சிறிய இன்று ஒன்றில் ஏறி விளையாடினோம். இரவாகி விட்டது, அனைவரும் வீட்டிற்குச் சென்று கொண்டிருக்கையில், திடீரென "டமார்" என்று ஒரு சத்தம் என் காதில் கேட்டது. நாங்களும் வாகனத்தை விட்டு இறங்கினோம், வாகனத்தின் முன் பகுதி உடைந்துவிட்டது. மாமா காவல அதிகாரியை தொலைபேசியின் ஊடாக அழைத்தார். சிறிது நேரத்தின் பின் வந்த காவலாளி விசாரித்தார். விசாரணை பிறகு, நாம் எமது வீட்டு புகைவண்டி-யில் சென்றோம், நாம் வீட்டில் நடந்ததைப் பற்றி பேசினோம், அன்று நான் கவலையுடன் தூங்கினேன்.

ஒரே நாளில்...
/விளையாட்டும்/
/விபத்தும்/

எழுதியவர்
ஹரிஷ் – அ
கரிசி –

# தமிழ்க் கலாசார விழுமியங்கள்

-ஷரணி-

மொழி ஒரு இனத்தின் தனித்துவம் ஆகும்.ஓர் இனத்தின் கலை கலாசாரச் சிறப்புக்களுக்கு ஆதாரமாயிருப்பது அவர்களது தாய் மொழியாகும். அவ்வகைகயில் நமது தாய் மொழியாம் தமிழ் மொழி கல் தோன்றி மண் தோன்றா காலத்தின் முன் தோன்றிய மூத்த மொழி. உலகச் செம்மொழி. அமிழ்தினும் இனிய மொழி. இப்பெருமை பெற்ற மொழியை தம் தாய் மொழியாகக் கொண்டவர்கள் தான் தமிழர்கள். அவர்களின் கலாசார விழுமியங்களை நோக்குவோம்.

'அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்' என்ற ஔவையின் வாக்கிற் கேற்ப, தமது தாய் தந்தையரை நாம் தெய்வம் போல் மதித்து வாழ்வது, அவர்கள் சொற்படி நடத்தல், பெரியோர்களை மதித்தல் போன்றவை நம் விழுமியங்களில் சிலவாகும். அதை தவிர்த்து, சேவை செய்பவர்களை கௌரவித்து ஊக்குவித்தல், விருந்தினரை வரவேற்று உபசரித்தல் போன்றவையும் நமது விழுமியங்களாகும்.



தமிழரின் கலாசார விழுமியங்களில் விழாக்களும் பண்டிகைகளும், வாழ்க்கையில் நடக்கும் பிறப்பு, பூப்பு அடைதல், திருமணம் மற்றும் இறப்பு போன்ற நிகழ்வுகளில், கடைபிடிக்கபடும் முறைகள் போன்றவையும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவை எல்லாம் எமது சமூகத்தின் அடையாளங்களாகும். இவற்றை, எதிர்கால சந்ததியினருக்கு எடுத்து கூறி பேணிப் பாதுகாப்பது எமது கடமையாகும். நாம் எங்கு வாழ்ந்தாலும், அந்நாட்டு விழுமியங்களை மதித்தே வாழ்கிறோம். இது ஓர் சிறந்த பண்பாட்டு விழுமியமாகும்.

மூத்த பிரஜைகளின் நலன் பேணுமுகமாக, கேசி தமிழ் மன்றத்தினால் நடாத்தப் படுகின்ற மூத்த பிரஜைகள் ஒன்றுகூடல், ஒவ்வொரு மாதத்தின் கடைசி சனிக்கிழமை முற்பகல் 10:00 தொடக்கம் மதியம் 2:00 மணிவரை, 112 High Street, Berwick, VIC 3806 எனும் முகவரியில் அமைந்துள்ள "Berwick Senior Citizens Hall" இல் நடைபெறுகின்றது. மேலதிக விபரங்கள் கேசி தமிழ் மன்ற இணையத்தளத்தில் www.caseytamilmanram.org.au பார்வையிடலாம்.

## எனது ஆட்டுக்குட்டி



நான் ஒருமுறைக்கு பாட்டி
வீட்டிற்கு சென்றேன்.
பாட்டி வீட்டில் அழகான
ஆட்டுக்குட்டி இருந்தது.
அதன் பெயர் ராசி. அதன்
நிறம் கறுப்பு. ராசி என்னை
கண்டதும் துள்ளி துள்ளி
ஓடி வந்தது. நான் அதற்கு
இலை உணவைக் கொடுத்தேன்.

ஹரிணி
வயது: 7

## *V.S. கணநாதன் எழுதிய சிறுகதை*

# *'யுத்தம் இல்லாத உலகம் கேட்டேன்'*

கவிஞர் வைரமுத்து இயற்றிய 'விடை கொடு எங்கள் நாடே,' எனும் பாடலை என் மனைவியும் நானும் ரேடியோவில் செவிமடுத்துக்கொண்டிருந்தோம். அப்போ மெல்போர்னில் வாழும் எங்கள் இரு பேரப்பையன்கள் விக்கியும் லக்கியும் கூடைப்பந்தாட்டம் விளையாடிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தனர். அவர்கள் எங்கள் அறையில் நிற்பதை உணராமல் நாங்கள் அந்தப்பாட்டில் லயித்திருந்தோம்.

இவர்கள் அவுஸ்திரேலியாவில் பிறந்து வளர்ந்தவர்கள். இப்போ (2017) எட்டாம் வகுப்பில் பல இனத்தவருடன் படிக்கிறார்கள். தங்களுக்குள் பலதையும் பற்றி விவாதிப்பார்கள். இச்சிறுவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு தக்க மறு மொழி கொடுப்பது என் வழக்கம். ஆனால் எங்கள் இலங்கை அனுபவங்களை இவர்களிடம் நான் இது நாள்வரை பகிர்ந்து கொள்ளவில்லை.




வைரமுத்துவின் பாட்டு கேட்டு முடிந்த பின்னர் , விக்கி என்னருகில் வந்து, "பாட்டா, யுத்தம் என்று பலரும் பேசிக்கொள்கிறார்கள். டிவி செய்திகளும் பத்திரிக்கை செய்திகளும் நாள்தோறும் அறிவித்தபடி இருக்கின்றன. எனக்குப் புரியவில்லை, பாட்டா. என்ன யுத்தம்? ஏன் ஆளை ஆள் குண்டு வீசி அநியாயமாய் மக்களைக் கொன்று குவிக்கிறார்கள்?" என்று கேட்டான்.

எனக்குத் திக்கென்று இருந்தது. பத்திரிகை செய்திகளும், டிவி காட்சிகளும் தினம் தினம் சின்னப்பிள்ளைகள் மனதை சஞ்சலப்படுத்துகின்றன. என் பேரன் கேள்விக்கு நல்ல பதில் கொடுக்க வேண்டும். இந்தக்காலத்துப் பிள்ளைகள் மிக்க அறிவும் ஆற்றலும் படைத்தவர்கள். அவர்கள் அறிவு எங்கள் அனுபவத்திலும் பார்க்க மிக விசாலமானது.

சில நிமிடம் யோசித்து விட்டு, "உன் பள்ளி வேலைகளை எல்லாம் செய்து விட்டு வந்து சில நிமிடங்கள் என்னோடிருந்தால் நான் உனக்கு யுத்தத்தைப் பற்றி விளக்க முடியும்."

அப்போ லக்கி இடைமறித்து, "அதெல்லாம் நானும் விக்கியும் நேற்று இரவே செய்து முடித்திட்டோம். நீங்கள் எங்கள் சந்தேகத்தை தீர்த்து வையுங்கோ." என்று வற்புறுதினான்.

நான் அவர்களைப் பாசத்துடன் அணைத்து பின்னர் ஓர் நாற்காலியில் உட்கார்ந்து ஆரம்பித்தேன்.

"இந்தப்பூமியிலே மனிதன் எப்போ குடும்பமாக வாழத் தொடங்கினானோ அன்றிருந்து தனக்கு, தன் குடும்பத்துக்கு என்ற தன்னலத்தோடு வாழ முற்பட்டான்.

ஆதிகால மனிதன் ஒரே இடத்தில் நிரந்தரமாக இருந்ததில்லை. காலநிலைக்கேற்ப தன் குடும்பத்துடன் இடம் பெயர்ந்து வாழ்ந்தான். காலப்போக்கில்

அவன் வேறு சாரார் வசிக்கும் இடம் சென்று அவர்களைக் கலைத்து விட்டு அவ்விடத்தை ஆட்சி கொண்டான்.

பண்டைய காலத்தில் அந்நியனை விரட்டி அடிப்பதும், சண்டை போட்டு வென்றவன் தன்னாட்சி புரிவதும், சிறிதிலிருந்து பெரிதாகி, பலசாலியானவன் தலைவனானான். காலச்சுழலில் அரசனாகத் தன்னை உயர்த்திக்கொள்வதும் நடைமுறையாக வளர்ந்தது.

“ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இரு குழுவிவனர் சண்டை போட்டு இடங்களைக் கைப்பற்றியது நாமறிந்த உண்மை. பேராசையால் ஓர் அரசன் பல உயிர்களைக்

கொன்று குவித்து பல சிற்றரசர்களை வென்று மாபெரும் சாம்ராஜ்யத்தை உருவாக்கினான்.

“பண்டைய காலங்களில் போர்கள் தினமும் சூரியஉதயத்தோடு தொடங்கி மாலை சூரிய அஸ்தமனத்தோடு முடியும். அதன் பின்னர் அடுத்த நாள் காலை வரை வீரர் எதிரிகளைத் தாக்கமாட்டார். மேலும் நேருக்கு நேர் நின்று அவர்கள் போர் தொடுத்தனர். ஓர் யானைப்படை வீரன் எதிரியின் யானைப்படை வீரனுடன் மட்டுமே சண்டை தொடுத்தான். யானைப்படை கால் படையினரை தாக்க வில்லை. ஒருத்தன் எதிரியின் பின் முதுகுக்கு அம்பு எய்யமாட்டான். பெண்கள் குழந்தைகளை ஒரு போதும் தாக்க மாட்டான். கீழே விழுந்தவனை வீரன் தாக்க மாட்டான். ஒரு மன்னன் போர்க்களத்துக்கு நேரே சென்று எதிரி மன்னனுடன் போர்தொடுத்தான்.

”ஆனால் தற்போது இந்தத் தர்மத்தை போர் தொடுக்கும் நாடுகள் கடை பிடிப்பதில்லை. இரவு பகல் என்று பார்க்காமல் குடும்பப் பெண்கள், குழந்தைகள் என்று அப்புறப்படுத்தாமல் நிறைய நாசம் விளைவிப்பர். எதிரி நாட்டை அழிப்பதே அவர்கள் குறிக்கோளாயிருக்கும்.”

இதனைக் கேட்ட என் பேரன்மார் ஆச்சரியத்தில் மூழ்கினர். “அந்தக்காலத்தில் எவ்வளவு உகந்த கோட்பாடுகள்? நம்ப முடியவில்லை, பாட்டா ,” என்றனர் இருவரும்.

நான் மீண்டும் பேசத்தொடங்கினேன். “இப்போ அரசர் ஆண்ட காலம் போய், மக்களால் தேர்ந்தெடுத்த ஜனநாயக ஆட்சிமுறை பல நாடுகளில் உருவெடுத்துள்ளது. இந்நாடுகளில் சில, பெரும் செல்வங்களை திரட்டி செல்வந்தர் நாடாக அமைந்துள்ளன. இவை ஒவ்வொன்றும் தம் நாட்டை பாதுகாக்க பல வித யுக்திகளை பயன்படுத்தி, ஆயுதங்களையும் மக்களைக் கொடூரமாக அழிக்கும் வெடி குண்டுகளையும் தயாரித்துள்ளன, மற்றவர் தங்களைப் பார்த்து பயந்து வாழவேண்டும் என்று நினைக்கின்றன.

தம்மைவிட பலசாலி ஒருவர் இருக்கக் கூடாதென்று, தேடிச்சென்று அவர்களை அழித்தும், தம்மை காப்பாற்றிக்கொள்ள முயல்கின்றன.

“இவற்றுக்கெல்லாம் மூல காரணம் பயம். பயம் எல்லா உயிரனத்துக்கும் உள்ளது. தன்னை என்ன தாக்குமோ என்ற பயம், தன் உடைமைகள் பறி போகுமோ என்ற பயம், தான் நோய் வாய்ப்பட நேருமோ என்ற பயம். இப்படி ஏராளமான பயத்துடன் மனிதன் வாழ்கிறான்.”

நான் பேசுகையில் என்னை லக்கி இடைமறித்தான். "பாட்டா, நீங்கள் தானே சொல்வீர்கள் மனிதனால் முடியாதது ஒன்றும் இல்லை. கடுமையாக உழைத்தால் எதுவும் முடியும் என்று."

"லக்கி, நீ சொல்வதும் உண்மைதான். பல நூற்றாண்டுகளாக இதைத்தான் சொல்லி எங்கள் சமுதாயத்தை வளர்த்துள்ளோம்.

“யுத்தம் இல்லாத உலகம் வேண்டும்., நாம் என்றும் ஒற்றுமையாய் இருப்போம். ஏன் ஒருவன் மற்றவனை எதிரியாக ஐயத்துடன் பார்க்க வேண்டும்?

நண்பனாக பழகி, ஒருவனுக்கொருவன் விட்டுக்கொடுத்து, நாம் சம்பாதிப்பதை எங்களிலும் பார்க்க வறுமைப்பட்டவர்களுடன் பகிர்ந்து, நாமும் சந்தோசமாகவும் மற்றவர்களையும் சந்தோசமாக்க

பழகிக்கொண்டால், நாங்கள் எல்லோரும் சண்டையும் அழிவும் பசி பட்டினியும் நோய் நொடியுமின்றி வாழ முடியும்.

“ஆனால் எங்கள் சமுதாயம் பலவிதமாக மாறுபட்டுக்கிடக்கிறது. எத்தனை சாதிகள், சமயங்கள், மொழிகள், மனித நிறங்கள், ஒவ்வொரு ஊர் கால நிலைப்படி ஒருவர் பழக்க வழக்கங்கள் உடைகள் இப்படி எத்தனையோ வேறுபாடுகள்.”

“அப்போ இதற்கு என்ன தான் தீர்வு,?” என்று விக்கி கேட்டான்.

“நல்லதோர் கேள்வி,” என்றேன். “என் அன்பு பேரன்களே!, மனிதனால் யுத்தத்தையும் அழிவையும் நிறுத்த முடியும். இதை அடைய நல்ல உள்ளம் படைத்த தலைவர்கள் ஒன்று சேர வேண்டும். ஒரு மனதுடன் மனிதனை அழிக்க உருவாக்கிய ஆயுதங்களை எல்லாம் அழிக்க வேண்டும். போர் ஆயுதமற்ற சமுதாயத்தை உருவாக்கினோமானால், யுத்தம் வராமல் எம்மை நாமே காப்பாற்ற முடியும்."

இப்படி நாங்கள் உரையாடுகையில் கவிஞர் வைரமுத்து இயற்றிய “யுத்தம் இல்லாத உலகம் கேட்டேன்” என்ற அருமையான பாடல் ரேடியோவில் ஒலித்துக்கொண்டிருந்தது.

# நட்பு

*-கிரிசிகன் சீவராஜா-*

ஒரு ஊரில், இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். அவர்களின் பெயர்கள் கமலன் மற்றும் விமலன். இவர்கள் மிகவும் நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள். இவர்களுக்கு வேறு பல நண்பர்களும் இருந்தார்கள். ஆனால் ஒரு சம்பவத்திற்கு பின், எல்லோரும் கமலனையும் விமலனையும் விட்டு விலகிப் போனார்கள். ஏன்?

இதுதான் நடந்த சம்பவம்...

ஒரு நாள், கமலனும் விமலனும் விஞ்ஞான ஆய்வுகூட வகுப்பில் இருந்தார்கள்.எல்லோரும் சந்தோசமாக படித்துக்கொண்டு இருந்தார்கள். திடீரென ஒரு தற்செயலான விபத்தில் விமலனின் முகத்தில் அமிலம் ஊற்றுப்பட்டது. எல்லோரும் பயத்தால் வகுப்பிலிருந்து வெளியே ஓடினார்கள். விமலன் வலி தாங்காமல் கத்தினான். உடனே கமலன் ஓடி வந்து தொலைபேசியில் அவசர சிகிச்சை வண்டி [ஆம்புலன்ஸ்] யை வரவழைத்து விமலனை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு அனுப்பி வைத்தான்.

எல்லாம் முடிந்த பிறகு, கவலைப்பட்ட கமலனும் வைத்தியசாலைக்கு வந்தான். வைத்தியர் அவசர சிகிச்சை பிரிவிற்கு வெளியே வரும்போது, கமலன் ஓடி வந்து, "விமலன் எப்படி இருக்கின்றான்?" என்று வைத்தியரை கேட்டான். " விமலன் நல்ல நிலையில் இருக்கின்றான். ஆனால் அமிலம் ஊற்றுப்பட்டதால் அவனின் முகத்தில் ஒரு அடையாளம் இருக்கின்றது. அதை அறுவை சிகிச்சையினால் சரிப்படுத்தலாம்." என்று சொன்னார். இதை கேட்ட கமலன் பயப்படாமல் இருந்தான். அவனின் உயிர் நண்பன் உயிரோடு இருந்ததைக் கேட்டு மிகவும் சந்தோசம் அடைந்தான்.

சில நாட்களின் பின் கமலன் வைத்தியசாலைக்குச் சென்று, விமலனைப் பார்த்து, " இப்போது நீ எப்படி இருக்கிறாய்?" என்று கமலன் கேட்டான். அதற்கு விமலன்

"நான் நலமாக இருக்கிறேன்", ஆனால் என் முகத்தில் ஒரு அடையாளம் இருக்கிறது. அதனால் நீ என்னை வெறுக்கிறாயா?" என்று கேட்டான்.
"எனக்கு ஒன்றும் பிரச்சனை இல்லை, நீ நலமாக இருப்பதை நான் கேட்கும் போது மிக சந்தோசமாக இருக்கின்றது." என்று கமலன் கூறினான்.

சில நாட்களுக்கு பிறகு, விமலன் பள்ளிகூடத்திற்கு போக மறுபடியும் ஆரம்பித்தான். விமலனுக்கு முதல் இருந்த நண்பர்கள் அவனிடம் நெருக்கமாக இருக்கவில்லை. பாடசாலையில் எல்லோரும் விமலனின் அருவருப்பான முகத்தைப் பார்த்து கேலி செய்து சிரித்தார்கள். இதை பார்த்த விமலனுக்கு கவலையாக இருந்தது. ஆனால், கமலன் மற்றவர்களோடு விளையாடாமல் விமலனோடு விளையாடினான். "ஏன் மற்றவர்களோடு விளையாடாமல் என்னோடு விளையாடுகிறாய்?" என்று விமலன் கேட்டான். அதற்கு கமலன், " உன் முகத்தை நான் பார்த்து உன்னோடு நான் நண்பன் ஆகவில்லை, நான் உன் அன்பான உள்ளத்தைப் பார்த்து உன் நண்பன் ஆகினேன். நாம் முதல் வைத்திருந்த நண்பர்கள் உன் முகத்தில் ஒரு மாற்றத்தால் உன்னை விலகிச் சென்றார்கள். ஆனால் நான் கடைசி வரையும் உன்னை விட்டு போகமாட்டேன்." இதை கேட்ட விமலன் மிக சந்தோசத்துடன் ஆச்சரியப்பட்டான்.

ஆனால் கமலன், விமலனை பார்த்து கவலைப்பட்டான். ஏனென்றால், அவன் பிழை செய்யாமல் அவன் முகத்தில் அமிலம் ஊற்றுப்பட்ட நேரத்தில், அவனின் நண்பர்கள் அவனை விட்டுப் போனார்கள். இதனால், அவன் ஒரு முடிவு எடுத்தான்...

விமலனின் அறுவை சிகிச்சைக்கு அதிக பணம் தேவைப்படும். அதற்காக, கமலன் ஒரு தற்காலிக வேலைக்குச் சென்றான். சில மாதங்களில், கமலன் சிறிது பணம் சம்பாதித்தான். அதே நேரத்தில், விமலனின் பிறந்தநாளும் நெருங்கியது. கமலன் இந்த சந்தர்ப்பத்தை தவற விடாமல், விமலனின் பழைய நண்பர்களைப் பார்த்து அவர்களை மறுபடியும் விமலனின் நண்பர்களாக சேர்த்துவைக்க முயற்சி செய்தான். இதனால் எல்லா நண்பர்களும் சேர்ந்து விமலனுக்கு தேவைப்பட்ட பணத்தை சேமித்து வைத்திருந்தார்கள்.

பல வாரங்கள் கடந்து போனது. இன்றைக்கு விமலனின் பிறந்தநாள். அதற்கு கமலன் விமலனுக்கு இரண்டு பரிசுகள் கொடுக்க நினைத்தான்.

மாலை ஆறு மணி ஆகிவிட்டது. விமலனின் பிறந்தநாளுக்கு யாரும் வரவேயில்லை. விமலன் மனச் சோர்வுடன் நாற்காலியில் அமர்ந்திருந்தான். திடீரென "நொக் நொக் நொக்." என்ற சத்தம் கதவில் கேட்டது. அவன் வெளியில் இருந்து "நான் உனக்கு ஒரு சிறந்த பரிசுகள் கொண்டு வந்துள்ளேன். கதவைத் திற!" என்று கமலன் அழைத்தான். உடனே, விமலன் கதவை திறந்தான். என்ன ஆச்சரியம்! வீட்டு முன் வாசலில் கமலனும், விமலனின் பழைய நண்பர்களும் இருந்தார்கள். "பிறந்தநாள் வாழ்த்துக்கள் விமலன்!" என்று ஒன்றாக வாழ்த்துச் சொன்னார்கள். "நாங்கள் உன் முகத்தைக் பார்த்து உன்னை விட்டு விலக நினைத்ததற்கு மன்னிக்கவும். கமலனால்தான் நட்பு என்ற உண்மைக்கருத்தை நாம் தெரிந்தோம்." என்று விமலனின் நண்பர்கள் கூறினார்கள்.இதற்கு பிறகு, தொடர்ந்து கமலன் விமலனிடம் இன்னொரு பரிசு கொடுத்தான். விமலன் அதை திறக்கும்போது, அதன் உள்ளே நிறையப் பணம் இருப்பதைப் பார்த்தான். "இது எதற்கு?" என்று விமலன் கேட்டான். "இது உன் அறுவை சிகிச்சைக்காக நாம் எல்லோரும் வேலை செய்து சேர்த்தோம்." என்று கமலன் சொன்னான். இதை கேட்ட விமலன் ஆனந்த கண்ணீர் விட்டு கமலனையும் மற்றும் நண்பர்களையும் கட்டித்தழுவினான். பின், எல்லோரும் சந்தோசமாக இருந்து விமலனின் பிறந்தநாளை மிகச் சிறப்பாக கொண்டாடினார்கள்.

**"முகநக நட்பது நட்பன்று, நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு"**

என்ற தெய்வப்புலவர் திருவள்ளுவரின் திருக்குறளுக்கு ஏற்றாற்போல் அவர்களின் நட்பு தொடர்ந்தது.

## கண்டறியப்பட முடியாத கல்லூரி கதை!

-கமலேஷ் கமல்-

முறிகண்டிப் பிள்ளையார் கோயில் முன்றலில் தேங்காய் உடைத்து விட்டு திரும்புகையில் தேகம் கடந்து செல்லும் பூவின் நறு மணம் கலந்த காற்றைச் சுவாசித்து திரும்பிப் பார்த்தேன், அது அவள் தான், அவளே தான், புலன் ஐந்திலும் அந்தக் கணத்திலே உறைந்து விட்டதாய் ஒரு நினைப்பு
பூமியில் அவள் எனைத் தன் மடி மீது வைத்து தாலாட்டா மாட்டாளா எனும் நினைப்பு!

மேகங்கள் கீழிறங்கி என் மார்பில் பூமாரி பொழிவது போன்ற மகிழ்ச்சியில் அவளைப் பார்த்தேன், அவள் பின்னேயிருந்து ஒரு சிறு குழந்தை வந்து கூப்பிட்டது மட்டும் காதில் கேட்டது, 'பிரியம்வதனா அக்கா! என்ன செய்யுறீங்க! நேரமாகுது, வீட்ட போக வேணுமில்லே'!
அந்தக் கணமே புரிந்து கொண்டேன், அவள் பிரியம்வதனா தான்,
பேருக் கேற்றாற் போல என் மீது எப்போது பிரியம் கொள்ளுவாள் எனக் காத்திருந்தேன். காத்திருப்பும் கனிவாகும் நாளும் வந்தது.

வேப்பமரத்தடித் திட்டில் குந்தியிருந்து வேற்றுக் கதைகள் பேசி, காற்றில் கலந்து வந்த அந்த நறு மணத்தின் சொந்தகாரி மீது, என் சிந்தையினைக் கொன்று விட்ட நெஞ்சக்காரி மீது என் நினைவெல்லாம் படிய, நீண்ட யோசனையில் ஆழ்ந்திருந்தேன். என் நடத்தையில் சிறிது வித்தியாசம் தெரிவதை உணர்ந்தவனாய் அருகே இருந்த நண்பன் காந்தன் கேட்டான்,

'ஏன் மச்சான் – கொஞ்ச நாளாய் ஒரு மார்க்கமா இருக்கிறாய்!' 'இல்லை மச்சான், போன கிழைமை கோயிலுக்குப் போயிருந்தேன். தேங்காய் உடைக்கும் போது இப்ப ஊருக்கு அகதியாக வந்துள்ள பிரியம்வதனாவைப் பார்த்தேன். என் நினைப்பெல்லாம் அவள் மீது நிறைந்து விட்டதே மச்சான்' காதல் செய்து பிரியம்வதனாவை எனை விட்டுப் பிரியாதவளாய் ஆக்க வேண்டும் என ஆவல் உள்ளது என்றேன்!

மாநாடு முடிகையில் மனதெல்லாம் நிறைந்திருந்த காதல் எனும் புனிதத்தை ஆடையாக்கி அணிந்துள்ள காம நோய் தீர நண்பன் உதவி செய்தான். களவாக வாங்கிய கந்தப்பரின் தவறணையின் மூன்று நாள் புளித்த பழைய கள்ளும், தோட்டம் கொத்தும் சின்னையாவின் பொக்கற்றிலிருந்து திருடப்பட்ட குறைச் சுருட்டும் அவனது மனதை நியூட்டனின் சிந்தனைகளுக்கு நிகராக மாற்றிப் போட்டு விட்டது. காந்தன் விஞ்ஞானியானான். காதல் மெய் ஞானி ஆகி விளக்கம் சொல்லத் தொடங்கினான். அவன் சொல்வதை செவிமடுப்பவனாய் நானும் அவன் அருகே மாணவனானேன்.

'அவன் நண்பன், எனக்கு காதலெனும் போதையூற்றிய திருநகரூர் வம்பன்! நாம்பனைத் தேடி ஓடும் பசு மாடாய் நானிருக்கையில் நல்வாக்கு தந்த இளவல்! நெஞ்செல்லாம் அவள் நினைப்பு, வற்றாத நிலாவரை நீரூற்றாய் பெருக்கெடுக்க, காதலெனும் உண்ணா நோன்பில் நானிருப்பதாய் உணவோ என்னை அடிக்கடி புறக்கணிக்கும் வேளையிலும் நண்பன் எப்போதும் உடன் இருப்பான் என்பதற்கு எடுகோளாய், ஐடியா தந்தான்.

'நீ ஒரு கடிதம் கொடுத்துப் பாரேன்'. அவள் எங்கே படிக்கிறாள் என்பதை உணர்ந்து பாடசாலை விட்டு வரும் வேளையில் கடிதம் கொடுத்தால் சில நேரம் ஆள் மடியலாம் மச்சான்! 'சும்மா கிடந்த இரணைமடுக் குளத்தின் கதவுகளை வலியப் போய் முட்டி உடைத்து வான் பாய விட்டு குடி மனைகளை நாசம் செய்வது போல, எனக்குள் ஓர் வில்லங்கத்தை அவன் வர வைத்தான்.

நாட் குறித்தேன், அவளை அடைய வேண்டும் எனும் ஆவல் மேலெழுந்து வர

கடிதத்தில் பார்த்தவுடன் அவள் பார்வை என்னைப் பிரகாசமுள்ள மனிதனாக்க வேண்டும் என ஆவல் கொண்டேன். நண்பர்களின் உதவியோடு கை கூடும் காதல்கள் தான் காத்திரமானவை எனும் தத்துவத்தின் உண்மை தெளிந்தேன். காந்தனின் கூற்றினைச் செவியிலிருத்திக் கடிதம் வரைந்தேன்.

எல்லாக் கடிதங்களிலும் அன்புள்ள என்று தொடக்கம் எழுதி எம் தமிழக் காதல்கள் விரசம் குறைந்து விட்டன என்பதால், என் காதலில் ஒரு சேஞ்ச் வைக்க நினைத்தேன். அதன் விளைவு கடிதம் இப்படி வந்து பிறந்தது!

'உயிராகி எந்தன் உடலோடு கலந்து; என் உணர்வாகப் புகுந்து மனதிற்குள் நிறைந்து, உயிர் மூச்சாசி இப்போது என்னோடு இணைந்திருக்கும் என் உயிர்த் தேவதையே! என்றென்றும் என் பிரியமுள்ள பிரியம்வதனா!

என் உணர்வுகள் யாவும் நீ திருடி நீண்ட நாளாகி விட்டதால், நலம் பற்றி எழுத இங்கே வேலையில்லை. மனதினுள் நீ வந்து பிள்ளையாரின் சந்நிதியில் புகுந்த பின்னே கொழுக்கட்டை, அவல், சுண்டல் வாங்க கோயிலுக்குப் போறேனோ தெரியாது, நீ வருவாய் எனும் நினைப்பில் நீண்ட நாளாய் பக்தி முத்திப் போய்; சித்தம் பித்துப் பிடித்து, சிக்கெடுக்க முடியாதிருக்கும் உந்தன் துவட்டாத கூந்தல் போலாகி விட்டேன்.

நீ இறுதியாக என்னை உந்தன் பார்வைகளால் பறித்தெடுத்து, விழிகளில் அமில நீர் சுரக்கத் தொடங்கிப் பல மாதங்களாகி விட்ட நிலையில் நான் உனக்காக எழுதும் அன்பு மடல்இது.

என் ஆசைகளை உணர்வுகளைத் தாங்கி வரும் என் இதயக் கீதமிது! இது தான் என் இறுதி மடலாக இருக்கலாம் என நினைக்கிறேன். நீ என்னை வெறுத்தால் இயக்கத்திற்குப் போய் நாட்டிற்காய் என் வாழ்வை அர்ப்பணிக்கலாம் என முடிவெடுத்துள்ளேன்.

அன்று நீ என்னைப் பார்வைகளால் தழுவிச் சென்ற நிலையும், உனக்கே தனித்துவமாய், உன்னை அந்தக் கோயிலில் வேறுபடுத்திக் காட்டிய வாசமும் என்னைக் கொன்று விட்டது. என் உணர்வுகளைத் தின்று விட்டது. உப்பளக் காற்றுக் கூட என்னை வந்து வாசமுள்ள தென்றலாய் வருடுவது போன்ற உணர்வு! இது உன்னால் தான் பெண்ணே! உன் பதிலுக்காக விழி மேல் வழி வைத்து காத்திருப்பேன்! இல்லையேல் **சென்ரியில்** (Military bunkers) விழியில் துவக்கெடுத்து பார்த்திருப்பேன்!

என என் கடிதம் எழுதி முடித்து, அவளின் பாடசாலை தேடியறிந்து அவள் வரும் வேளைக்காய் காத்திருந்தேன். கூடை பூட்டிய லுமாலா சைக்கிளில் அவள் வந்தாள். கோடை வெய்யிலினால் நீரேதும் அருந்தாது அவள் நினைப்பில் இருந்த என் குரலையும் ஒரு செருமல் செருமி, கம்பீரக் குரலாக்கி 'எக்ஸ்கியூஸ்மீ'! என்று குரல் கொடுத்தேன். சுற்றும் முற்றும் பார்த்தவள் கடிதத்தை வேண்டப் பயந்து, பெண்மைக்கேயுரிய நாணத்துடன் தரை பார்த்திருந்தாள்.

இது தான் தருணம் என்று அவளின் சைக்கிள் கூடைக்குள் என் கடிதத்தை வைத்து விட்டுப் போனேன். தொடர்ச்சியாக இரு நாட்கள் அவளின் முடிவிற்காய் பள்ளிக் கூட வாசலில் வெயிற் பண்ணிக் கொண்டிருந்தேன். மூன்றாவது நாள் அவள் வரும் நேரம் பார்த்து பாடசாலை வாசலுக்குப் போனேன்.

'ஹலோ பிரியம்வதனா! உங்கடை முடிவென்ன என்று சொல்ல முடியுமா? எனக்கேட்டேன், அவள் என் பின்னே பார்த்துச் சிரித்தாள். புரியாதவனாய்த் திரும்பிப் பார்த்தேன். பஷன் பிளஸ் மோட்டார் சைக்கிளில் விடுதலைப் போராளி ஒருவன் துவக்குடன் (துப்பாக்கியுடன்) வந்திறங்கினான்!

'அறிகிலார் எல்லோரும் என்றே என் காமம்
குறுகின் மறுகும் மருண்டு!'
திருக்குறள்- அதிகாரம் 114, குறள் 1139
*பிற்சேர்க்கை: இது ஒரு சிறிய கவிதை கலந்த உரை நடைப் பதிவு.*

# தமிழ் மொழி, தமிழனின் அடையாளம்

-துவாரகன் சந்திரன்-

தமிழ் மொழி பழமையானது, **"கல்தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி",** தமிழ் மொழி ஒவ்வொரு தமிழனுக்கும் ஓர் அடையாளம். **தமிழ் மொழியை மறப்பதும் தாயை மறப்பதும் ஒன்றே..** தற்போது தமிழர்கள் தமது மொழியை பேச வெட்கப்படுவதையும், அதை இரண்டாவது மொழியாக படிக்கத் தயங்குவதையும் கண்டு வேதனைப் படுகின்றேன்.

தமிழ் மொழி எங்களுடைய அடையாளம். வேற்று இனத்தவர்கள் எங்களுடைய திறமைகளையும், எங்களுடைய பாரம்பரிய பழக்க வழங்களையும், வீர விளையாட்டு க்களையும் அழிக்க, மறைக்க நினைக்கிறார்கள். எம் தாய் மொழியான தமிழ் மொழியை நாம் பேசாமல் விட்டால், நாமே எம்மொழி அழிவதற்குக்கு அவர்களுக்கு மேலும் உதவி செய்வதாக ஆகிவிடும். எமது மொழியை, பண்பாட்டை, கலாச்சாரத்தை தமிழர்கள் ஆகிய நாம் தான் பேணி பாதுகாக்க வேண்டும். மற்ற இனத்தவர்கள் தங்களுடைய மொழியை தைரியமாக பேசும் பொழுது ஏன் நாம் வெட்கப்பட வேண்டும்? உலகத்தில் முதல் தோன்றிய ஐந்து மொழிகளில் தமிழும் ஒன்று. அந்த பழமை வாய்ந்த மொழியை நாம் கதைப்பதற்கு பெருமைப்பட வேண்டும் அல்லவா.

மேலும், தமிழ் மொழியை படிக்கத் தயங்குவது மிகத்தவறு. ஆங்கிலப் பாடசாலையில் நாம் கட்டாயமாக ஓர் மொழியை கற்கத்தான் வேண்டும். இந்தோனேசிய மொழி, யப்பானிய மொழி, பிரெஞ்ச் போன்ற மொழிகளை கற்கின்றோம். ஆனால் ஏன் எங்களது சொந்த மொழியை கற்கத் தயங்குகிறோம்? ஆங்கிலத்துடன் உங்களது சொந்த மொழியையும் கற்றால் உங்களது மொழி வளரும் என்பதை ஆராச்சியாளர்கள் கூறுகிறார்கள். இன்னுமொரு மொழியை கற்பது, இன்னுமொரு மூளையை வைத்திருப்பது போன்றது. "கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு" என்ற கூற்றுக்கு அமைய நாம் எமது மொழியில் நிறையவே ஆராட்சிகளை மேற்கொண்டு கற்க வேண்டும்.

தமிழ் மொழியை நாம் வீட்டில் பேச வேண்டும், தமிழை கற்கும் பொழுது நிறைய விடயங்களை அறிந்துக்கொள்ளலாம், இதனால் எமது அறிவு விருத்தி அடையும். தமிழ் மொழியின் சுவாரஸ்யத்தை அடைய நாம் எமது பிள்ளைகளுக்கு தமிழை ஓர் சுவாரஸ்யமான முறையில் கற்பிக்க வேண்டும். எமது திறமைகளையம், ஆற்றல்களையும், கலைகளையும் இந்த நவீன உலகத்திற்க்கு பெருமையாக எடுத்துக்கூறவேண்டும்.

அண்மையில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் தமிழை ஒரு பாடமாக எடுத்த மாணவர்கள் எல்லோரும் அதிக புள்ளிகள் எடுத்தமைக்கு அந்த மொழியைக் கற்ற விதமும் கற்பித்த முறைமையும் மாணவர்களின் கற்கும் ஆர்வமும், தழிழ் மொழியின் இலககண இலக்கிய ரீதியிலானா ஆராட்சிகளும் மிகப் பெரிய காரணம். என்றால் அது மிகையாகாது. இப்படியான செயற்பாடுகள் மூலம் எமது தமிழின் பெருமையை நாம் உலகறியச் செய்யலாம். எனவே வீட்டில் எல்லோருடனும் தமிழில் பேசுவோம். தமிழை வள்ர்ப்போம்.

# செயல் சுமையிறக்கம் (*task offloading*) - தொலைத்தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் வளர்ந்துவரும் ஒரு தீர்வு

**சண்முகநாதன். தனஞ்ஜெயன்**

உங்களின் கைபேசியிலுள்ள விளையாட்டு செயலி [game App] ஒன்றில் நீங்கள் விளையாடும்போது கைபேசி மின்கலம் விரைவாக செயலிழக்கும் [இறந்துவிடும்] பிரச்சினையை நீங்கள் எதிர்கொண்டிருக்கிறீர்களா? கைப்பேசி பாவனையாளர்கள் எதிர்நோக்கும் இவ்வாறான பிரச்சினைக்கு தீர்வாக இனி வரவிருக்கும் ஐந்தாவது பரம்பரை கைபேசி தொலைத்தொடர்பாடல் [fifth generation mobile communication -5G] காலத்தில் ஆராய்ச்சியாளர்கள் முன்வைக்கும் விடயங்களை அறிமுகப்படுத்துவதுதான் இந்த ஆக்கத்தின் நோக்கம்.

கைபேசி தொலைத்தொடர்பாடலின் ஆரம்ப காலங்களில் கைபேசி வெறுமனே ஒருத்தரோடு ஒருத்தர் கதைப்பதற்கும் குறுஞ்செய்தி அனுப்புவதற்குமே பயன்பட்டது. மிகத் திறன் கொண்ட நுண்ணறிபேசிகளின் [smart phone] அறிமுகத்துடன் கைபேசிகள் கணினிகளின் செயற்பாடுகளை செய்ய ஆரம்பித்தது. கைபேசிகளில் கணினிகளுக்குரிய செயற்பாடுகளை செய்வதற்கு வேண்டிய சேவைகளை வழங்குவதற்காக தொலைத்தொடர்பாடல் வலையமைப்பை மேம்படுத்த வேண்டிய கட்டாயம் தொலைத்தொடர்பாடல் துறையினருக்கு ஏற்பட்டது. இது இத்துறையினருக்கு பெரும் சவாலான விடயமாகியது. அவற்றில் ஒரு பிரச்சினையும் [நிகழ்காலத்தில் பாவனையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினையும்] ஆராய்ச்சியாளர்கள் அதற்கு எவ்வாறு தீர்வுகாண முயல்கிறார்கள் என்பதனையும் இங்கே பார்க்கப் போகிறோம்.

கைபேசியிலுள்ள மின்கலம் விரைவாக செயலிழப்பதற்கு இலகுவான தீர்வாக மின்கலத்தின் சேமிப்புத் திறனை [ கொள்ளளவை] அதிகரிக்கலாம் என்பதை முன்வைக்க முடியும். அப்படியானால் ஏன் கைபேசி உற்பத்தியாளர்கள் அதனைச் செயற்படுத்த முடியவில்லை என சிந்தித்ததுண்டா? மின்கலக் கொள்ளளவை அதிகரிக்க வேண்டுமானால் கைபேசியின் அளவு அதிகரிக்கப்பட வேண்டும், பாரம் கூடும். ஆனால் இது கைபேசியின் இயல்புக்கு முரணானது. ஏனெனில் கைபேசி என்பது கைக்கு அடக்கமானதாகவும் பாரம் குறைந்ததாக இருக்க வேண்டும். அதே நேரம் சமகால மின்கல சேமிப்புத் தொழில்நுட்பம் கைபேசி உற்பத்தித் தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சியோடு போட்டி போட முடியாமல் இருக்கிறது. ஆதலால் கைபேசி மின்கலத்தின் திறனை அதிகரிக்கும் தொழில்நுட்பம் தற்போதைக்கு ஒரு தீர்வாக அமையாது. அப்படியானால் வேறு எந்த வழிகளில் எமது இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்?

கைபேசி மின்கலம் விரைவாக செயலிழக்கும் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம் என்ன? சில செயலிகள் மட்டுமே மின்கலத்தை விரைவாக செயலிழக்க வைக்கும் என்பதை நீங்கள் சிலவேளைகளில் அவதானித்திருக்கக் கூடும். அது ஏன்? ஏனென்றால் அவ்வாறான செயலிகள் சிக்கலான படிமுறைச் செயற்பாடுகளைக் கொண்டது. அதனால் கைபேசியின் வளங்களை மிக உச்சமாக பாவிக்கிறது. கைபேசி திரையில் எங்களுக்கு காட்டாமலேயே நிறைய செயல்களை பின்னணியில் செய்கிறது.

இவ்வாறான பின்னணி செயல்கள் தான் மின்கலம் விரைவான செயலிழப்புக்கு காரணம் என்பதை அறிந்து கொண்டால் இன்னுமொரு கேள்வி எங்களுக்குள் எழும். அதாவது பாவனையாளர்களுக்கு வெளிப்படையாக தெரியாமல், பாவனையாளார்களின் பங்களிப்பில்லாமல் பின்னணியில் நடக்கும் செயல்களை ஏன் கைபேசியில் செய்ய வேண்டும்? இவ்வாறான பின்னணியில் நடக்கும் செயற்பாடுகளை இன்னுமொரு வலுமிக்க வழங்கியில் [powerful server] செய்தபின்னர் பெறுபேறுகளை மட்டும் பாவனையாளர்களின் கைபேசிக்கு அனுப்பினால் போதும் தானே. இச்செயன்முறையைத்தான் செயல் சுமையிறக்கம் [task offloading] என்கிறார்கள். அதாவது கைபேசியில் செய்ய வேண்டிய கடினமான செயல்களை வலுமிக்க வழங்கியில் செய்தபின்னர் பெறுபேறுகளை கைபேசியில் காட்டுதல்.

செயல் சுமையிறக்கத்திலுள்ள பிரதான சவால் என்னவெனில் சுமையிறக்கப்பட்ட செயல்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் செய்து முடிக்க வேண்டும். அதாவது கைபேசியிலிருந்து வழங்கிக்கு செயல்களை செய்வதற்கு வேண்டிய தரவுகள் தரவேற்றப்பட [upload] வேண்டும், பின்னர் வழங்கியில் அவை மற்றைய பாவனையாளர்களின் செயல்களோடு நிரற்படுத்தப்பட்டு [queueing] செயற்படுத்தப்பட [execute] வேண்டும். பின்னர் அதற்குரிய பெறுபேறுகள் கைபேசிக்கு தரவிறக்கப்பட [download] வேண்டும். அவ்வனைத்துச் செயற்பட்டுக்குமான மொத்த நேரம் ஓவ்வொரு செயலுக்குமான காலக்கெடுவுக்கள் நடைபெற வேண்டும். கண நேரத்தில் பெறுபேறுகள் தெரிய வேண்டிய செயலிகளுக்கு [நிகழ்நேர செயலிகள் – realtime App] காலக்கெடு மிகக் குறுகியதாக இருக்கும். உதாரணமாக இணைப்பு நியமாக்கச் செயலிகள் [augmented reality apps], தோற்ற மெய்மை செயலிகள் [Virtual Reality apps], நிகழ்நேர பேச்சு மொழிபெயர்ப்பு செயலி [realtime speech translation App]. தொலை தூரத்தில் வழங்கிகளை நிறுவினால் தரவேற்ற தரவிறக்க நேரங்கள் அதிகரித்து இவ்வாறான செயலிகள் சரியாக செயற்படாது.

செயல்கள் சுமையிறக்கத்தின்போது வழங்கிகளைப் பாவிப்பதனால் கைபேசி பாவனையாளர்கள் சேவை வழங்குனருக்கு மேலதிக கட்டணங்களைச் செலுத்த வேண்டியிருக்கும். கைபேசி பாவனையாளர்கள் அவர்களுக்கு நன்மையாக/ இலாபமாக இருந்தால் மட்டுமே செயல் சுமையிறக்கத்திற்கு உடன்படுவார்கள். கைபேசி பாவனையாளர்கள் இலாவமடைவதை எப்படித் தீர்மானிப்பது? ஒரு செயலியின் எந்தெந்த செயல்களை தரவேற்றம் செய்ய முடியும்? அதற்கு எவ்வளவு வளங்கள் தேவை? ஓவ்வொரு செயலையும் குறித்த நேரத்திற்குள் செய்து முடிக்க முடியுமா? சேவை வழங்கியை பாவனியாளர்களிற்கு அண்மையாகவா தூரமாகவா நிறுவ வேண்டும்? அதற்கு சேவை வழங்குனருக்கு ஏற்படும் செலவுகளை எவ்வாறு குறைக்க முடியும்? கைபேசி பாவனையாளர்கள் இயக்கத்திற்கேற்ற வகையில் எவ்வாறு சிறப்பாக சேவைகளை வளங்க முடியும் போன்ற கேள்விகளுக்கு விடைதேடும் ஆராய்ச்சிகள் தற்போது நடைபெறுகின்றன.

# படம் காட்டிறம் பார்த்து எழுதுங்கோ



*மேலுள்ள படத்தைப் பார்க்கும்போதுஎழுத்தாளர்களின் எண்ணங்களில் எழுந்திட்ட கருத்தோட்டங்களின் கோர்வை.....*

**ருத்திராபதி அவர்களின் கற்பனையில்.....**

## கற்பனை 1

அனைவருக்கும் சனிப்பெயர்ச்சி வாழ்த்துக்கள்,

படம் பார்த்தல் புரிந்திருக்குமே!! அதான்! அதேதான்!! இன்னும் நாசா விஞ்ஞானிகள் இப்படித்தான் தெரு தெருவா சுத்திக்கிட்டு திரிகிறார்கள்... ஆனா நம்ம சனீஸ்வரர் கிட்ட மட்டும் போக முடியில.. கோடிக்கணக்கா செலவு பண்ணி கருவியெல்லாம் கண்டுபுடிச்சி உலகம் பூரா.. ஏன் அன்ட சராசரத்தில் உள்ள அத்துணை கோள்களையும் பார்த்துட்டான்.. நம்ம சனீஸ்வரன் வீடான திருநள்ளாறு என்ற ஊரை மட்டும் அவனால பார்க்கவே முடியேல்ல. பாக்க முடியாமலே பல விஞ்ஞானிகள் போய் சேர்ந்துட்டாங்க!! அனாலும் முயற்சி தொடருது... என்ன நடக்குதுன்னா [?!] கருவி சுத்திக்கிட்டே வந்து நம்ம திருநள்ளாறு ஊருக்கு பக்கத்தில் வந்ததும் ஒரு கருப்புநிற மை போன்ற ஒன்று தோன்றி எல்லாத்தையும் மறைக்குது. அப்படியே சுத்தி அந்த ஊறை தாண்டினதும் எல்லாம் நல்லா தெரியுது.

ஆக நாங்க பத்து தமிழ் விஞ்ஞானிகள் திருநள்ளாத்துக்குள்ளே புகுந்து ஒவ்வொருவரும் தனியா பிரிஞ்சி போய் கல்லு, மண்ணு, பாறை ன்னு ஒன்னுவிடாம போட்டோ எடுத்து தகவல் சேகரிக்கிறோம். எல்லாத்தையும் எடுத்துக்கிட்டுபோய் ஹார்வர்ட்ல உக்காந்து ஆராய்ச்சி பண்ணி உங்களுக்கும் சொல்றோம். அதுவரை, நீங்கள் போய் சனிப்பெயர்ச்சி பலன்களை படிச்சுட்டு மகிழ்ச்சியா சுத்துங்க. வரட்டா!!

## கற்பனை 2

ஹார்வர்ட் ல் தமிழ் இருக்கை அமைந்தாலும் அமைந்தது, மொழி ஆராய்ச்சி எனச்சொல்லி இப்படி ஆக்கிட்டாங்களேப்பா!!! இந்தத் தமிழைப் பேசினவன் எழுபதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே கற்களோடும் பாறைகளோடும் வாழ்ந்திருக்கிறானாம்!! அதைப்போய் "ஆராய்ச்சி செய்" என சொல்லி இந்த இத்துப்போன காமிராவையும் வெயிலை மறைக்க பழைய தொப்பியையும் கொடுத்து அனுப்பிட்டங்கப்பா!!! என்னத்த சொல்ல!!

உலகத்திலே ஒரு கூட்டமே சேர்ந்து, தமிழனை கட்டம் கட்ட நினைக்குது!! அவனை சிறிய வட்டத்துக்குள்ளே அடைக்கப் பார்க்குது!! ஆனா, அப்பத்தான் உண்மையெல்லாம் வெளியில் வருது!! இந்த பூமி பந்து பூரா ஏதோ ஒரு வடிவிலே தமிழனின் தொடர்பு இருக்கிறது இந்த உலக்குக்கு தெரிய வருது. உலகம் பூராவும் பரந்து வாழ்ந்த கூட்டமால்ல இருக்கும் போல. இது வேலைக்கு ஆவறது இல்ல!! இன்னைக்கு பாறைய படம் புடிச்சி ஆராய சொல்வான். நாளைக்கு அதையே கொஞ்சம் தின்னு பாரும்பான். ஐயகோ!! நாம பேசாம போய் உண்மைய சொல்லிட்டு வேற ஏதாவது சின்ன மொழியா எடுத்து ஆராய்ச்சி பண்றதுபோல நடிச்சிக்கிட்டே, நம்ம காலத்த ஒட்டிடவேண்டியதுதான்!!

**பிரமிளா விசாகன் அவர்களின் கற்பனையில்.....**

## மீண்டும் வருவாயோ?

உன்னுடன் நடந்த நாட்களும்
உன்னில் இரசித்த காட்சிகளும்
எம்மை வருடிய தென்றலும்
இன்னும் மனதில் பசுமையாய் உள்ளன

உனைப் பிரிவேன் என்று
ஒரு கணமும் நினைத்ததே இல்லை
உன்னருகிலே இருப்பேன் என்று
எப்பொழுதுமே நினைத்தே வந்தேன்

ஊரார் பிரிந்த நேரம்
உன் மனதில் கல்லாகிய பாரம்
ஊமையாகி நீயிருந்த போது
உணர்ந்து கொண்டேன் நானும் கொஞ்சம்

ஊருக்கு ஒரு உபதேசம்
எனக்கும் உண்மையாகிய போது
உனை நானும் மறப்பேன் என்று
ஒருபோதும் நினைத்தறியேன்

வேண்டாம் இந்த வாழ்க்கை என்று
வெறுப்பாகி நீ விடை தரும் போது
வந்து நின்றேன் வாழ்வதற்கு
வருவாயோ மீண்டும் எழுந்து

வறண்டு போன உனது கன்னமும்
வாடிப் போன உனது நெஞ்சமும்
மறந்து எழுந்து வா - இன்னும்
வாழ்க்கை இருக்கு பிறந்து வா

தேடுகிறேன் உனது பசுமையை
நாடுகிறேன் உனது இளமையை
திரும்ப உதயம் கொண்டு வா
தேசம் நீயெனக் கொண்டாட வா.

இளவேனில் ஆசிரியர் குழுவினால் "படம் காட்டிறம் பார்த்து எழுதுங்கோ" வின் மகுடம் சூட்டப்படும் எண்ணக்கரு....

**சரண்யா பிரணவதர்ச்சசர்மா அவர்களின் கற்பனையில்.....**

## ஒரு உழவனின் பார்வையில்...

நாளெல்லாம் பாடு பட்டு
நாட்டுக்காக நானுழைத்து,
நெற்றி வியர்வை சிந்தி
நீ உயிர் காக்க, நான் பயிர் வளர்த்தேன்!
என் உயிர் இளைத்தேன்!
காடு மேடாக இருந்த உன்னை
கலப்பை கொண்டு நானுழுதேன்,
கல்லும் முள்ளும் பரந்து கிடந்தவளை,
கண் கண்ட இடமெல்லாம் பாசுமையாக மாற்றி,
கண் விழித்து காவல் காத்து பயிர் வளர்த்தேன்.
முத்திட்ட நெல் மணிகளையும்
மலை போல குவித்துத்தந்தாய்!
முற்றித்தலை குனிந்த நெற்பயிரையும்
முந்தி அறுவடை செய்யத்தந்தாய்,—உன்
முந்தானை மீதினிலே மெல்ல பரவி விட்டேன்,உன்
முகம் காட்டும் புன் சிரிப்பை நான் காண்பததற்காக!
அள்ளிக்கொடுத்த அன்னையென உன்னைப்போற்றி—மண்ணையும்
அள்ளியெடுத்து முத்தம் கொடுத்தேன்—தை மாதத்திலே
அடுப்பு மூட்டி பொங்கல் காய்ச்சி
ஆகாயத்தந்தைக்கும் பூலோல அன்னைக்கும் படைத்தேன்!
என் அன்னை நீ வயல்நிலத்தாயே
அன்று அள்ளிக்கொடுத்தாய் அரிசியை,
பச்சைப்பட்டாடை கொண்டு—ஈரம் சொட்டும்
பட்டு மேனியிலே என்னையும் உயிர் காத்தாய்!
ஆனால் இன்றோ!
உனக்கும் பருக நீரில்லை,
பயிரிட நெல்லுமில்லை,
உழுவதற்கு ஏருமில்லை
வேலை செய்ய நானுமில்லை!
காட்டை அழித்து கட்டடம் கட்டுகிறார்கள்
மழையை மரித்து மண்ணை கரியாக்குகிறார்கள்,

கம்ப்யூட்டரை (computer) கமம் செய்கிறார்கள்.

நெட் வேர்க்கிற்கு (network) நீர் பாய்ச்சுகிறார்கள்,

உன்னையும் என்னையும் மாய்த்து விட்டு

நிலவில் போய் குடியேற திட்டமும் தீட்டுகிறார்கள்

ஆனால் நீ இன்று பரட்டை சுந்தரியாக

புகைப்படத்திற்கு போஸ் (pose) மட்டும் கொடுக்கிறாய்

எடுப்பவனுக்கும் சோலியில்லை! உனக்கும் வெட்கமில்லை!

*இப்படிக்கு*

*எல்லாம் இழந்தும், தன்மானம் இழக்காத*

*உழவன்*

*சரண்யா பிரணவதர்சசர்மா.*

**நவரத்தினம் வைத்திலிங்கம் அவர்களின் கற்பனையில்.....**

*வானம் பார்த்த பூமியிது வறண்டுவிட்டதேன நீ*

*விமானம் ஏறிப் பறக்காதே நீ*

*நிதானம் இழக்காதே நீ போகுமிடம் அங்கு ஒரு*

*விதானமுமின்றி நீவாழவும் வேண்டிவரும் மறக்காதே!*

**சிட்னி தோழி அவர்களின் கற்பனையில்.....**

## செம்மண்

மனிதன் அன்று சந்திர மண்டலத்தில் காலடி வைத்தான், இன்று சிவப்பு கிரகத்தில் காலடி வைத்துவிட்டானா? சரித்திரத்தில் தன் பெயர் இடம்பெற விரும்பி உல்லாச விண்வெளிக் கப்பலில் சென்ற அந்த 24 பேரில் இவனும் ஒருவனா? தொப்பி உண்டு, பை உண்டு, கையில் கமராவா? இல்லை கையடக்க தொலைபேசியா? சாத்தியமில்லை,இவன் விண்வெளி போகும் உடை அணியவில்லை, $O_2$ இல்லாமல் சுவாசிப்பது அரிது. அவன் எங்கு சென்றான்?

அவுஸ்திரேலியாவின் நடுவில் இருக்கும் நகரம் அலிஸ்ஸ்பிரிங். இங்கு இந்நாட்டின் ஆதிவாசிகள் பலர் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகின்றார்கள். அங்கு இருந்து 335km தூரத்தில் உள்ளவிடம் உலரு சென்ற சுற்றுலா பயணியா இவன்? அந்த $40^{0}$ வெப்பத்தைத் தாங்காது தொப்பி அணிந்துள்ளானா? அந்த செம்மண் ஏரிஸ் குன்றை பார்த்து வியர்ந்து புகைப்படம் எடுத்தானா? இல்லையேல் அவன் வேறு எங்கு சென்றான்?

தன் ஊரை இழந்து, உறவை இழந்து, நாட்டை விட்டு பலவருடம் வெளிநாட்டில் வாழ்ந்தவனா? இன்று தன் சொந்த மண், இந்த செம்மண்ணில் காலடி வைத்தானா? மீண்டும் ஊரில் வாழ வந்தானா? இல்லை இவனும் இன்று ஒரு வெளிநாட்டு சுற்றுப்பயணியா? தனக்காக

ஒரு புகைப்படம் எடுத்தானா? இல்லை முகபுத்தகத்தில் பல விருப்பு எண்ணிக்கையை அதிகரிக்க படம் எடுத்தானா? இந்த மனிதன் சென்ற இடம்தான் என்ன?

**செ. உலகப்பிரகாசம் அவர்களின் கற்பனையில்.....**

*வெஞ்சமரும் வெங்களமும்*
*கொஞ்சவரும் கிளிகளென*
*கொண்டுலவும் மரபெங்கள்*
*தமிழினத்தின் மரபு என்ற*
*மனத்திடத்தோடு மானங்காக்கும்*
*பாதைவழி செல்கின்ற*
*வீரனிவன் பாரீர்*

*போகின்றான் தம்பி போகின்றான்*
*அண்ணன் காட்டிய பாதை இலக்கு நோக்கி போகின்றான்*
*அழிவை எம்மீது வீசிச் சிரித்தவனை*
*விரட்டி ஓட்டிடவென்றே வீரனிவனே  செல்கின்றான்.*
*சென்று வா தம்பி வென்று வா*

**மாதுரியன் அவர்களின் கற்பனையில்.....**

**<u>கால் போன போக்கிலே...</u>**

வழிப்போக்கன் இல்லா வூருக்கு
தனிமையிலே வந்தேன்
கைதொலை பேசி சைகையையும் இழந்தது
வழி தவறி தவித்தே போனேன்
கால் போன போக்கிலே
கால் நடைபோனேன் கானவூ ருக்கு
கனத்த  னகால்கள் கதறின நெஞ்சம்
காத்தருள் ஈசா என்றேன்
கதறினேன் கருனை கொள் ஈசன்
காட்டினான் ஊரின் எல்லையை.

# காலப்பந்து கடந்த பாதை

காலபந்து ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் மிகவும் பிரபல்யமான விளையாட்டு.
காலபந்தாட்டம் 2000 ஆண்டுகள் பழமையானது. சீனா, மத்திய அமெரிக்கா, கிரேக்கம், ரோமாபுரி நாடுகளில் தொடங்கியதாக வரலாறு. ஆங்கிலேயர் முதலில் கால்பந்தாட்ட விதிமுறைகளை உருவாக்கியதாக நம்பப்படுகிறது. காலப்போக்கில் பல விதிமுறைகள் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

1981 - விதிகளை மீறும் எதிர்தரப்பினருக்கு தண்டனையாக உதைக்கும் வாய்ப்பை பெறுதல் (penalty kick). 1970 - விதிகளை மீறும் கால்பந்தாட்டகாரருக்கு எச்சரிக்கையாக மஞ்சள் அட்டையை காண்பித்தல், விளையாட்டில் இருந்து விலக்குவதற்காக சிவப்பு அட்டையை காண்பித்தல்.

ரியல் மாட்ரிட், பார்சிலோனா, மன்செஸ்டர் யுனைடெட், ஆர்சனல் மற்றும் மன்செஸ்டர் சிட்டி ஆகியன பிரபல்யம் வாய்ந்த குழுக்கள். லியோனல் மெஸ்ஸி, கிறிஸ்டியானோ ரொனால்டோ, பெலே மற்றும டியாகோ மரடோனா ஆகியோர் சிறந்த கால்பந்தாட்ட வீரர்கள்.

எனக்கு மிகவும் பிடித்த உதைபந்தாட்டம் ஓர் சிறந்த குழு விளையாட்டு ஆகும்.

கவின் சத்தியா
ஈ முத்தமிழ் பாடசாலை - கிளென்வேவலி

# எண்ணம்

-கீர்த்திகன் சீவராஜா-

"தம்பி தம்பி சீக்கிரமாக எழும்பு! நீ இன்றைக்கு அவுஸ்திரேலியாவுக்கு போகிறாய்!" என்று எனது அம்மா எழுப்பினார். இதைக் கேட்டு, நான் உடனே படுக்கையிலிருந்து எழும்பி, என் பற்களைத் துலக்கி, முகத்தை கழுவி, நல்ல ஆடை அணிந்து, எனது பைகளை வெளியே நிற்கும் மோட்டார் வண்டிக்கு கொண்டுபோனேன். எனது பாசமிக்க அம்மா, எனக்கு முத்தம் கொடுத்து, 'சென்று வா மகனே' என்று சொல்லி, என்னை அனுப்பி வைத்தாள்.

நான் மோட்டார் வண்டியில் சென்று, புகையிரத நிலையத்தை அடைந்தேன். அங்கே இருந்து, நான் விமான நிலையத்திற்கு போவதற்கு ஒரு புகை வண்டியைத் தேடி அதில் ஏறினேன். இந்த புகை வண்டியில் இருக்கும்பொழுது, நான் என் அம்மாவை தனியே விட்டேன், என்று நினைத்து கவலைப்பட்டேன். ஆனால், இந்த முடிவுதான் எனது எதிர்காலத்திற்கு நல்லது என்று நினைத்து நான் எனது பயணத்தை தொடர்ந்தேன். யன்னல் வழியே பார்க்கும் பொழுது, உயரமான மரங்கள், அழகான மிருகங்கள் மற்றும் சின்ன சின்ன பூக்கள் என்று கண்டு ரசித்தேன். இதைப் பார்த்து, எனது இரண்டு கண்கள் சூரியனைப் போல பிரகாசமடைந்தது. இந்த காட்சிகளைப் பார்க்கும் பொழுது, இந்த ஒரு மணித்தியால பயணம், இரண்டு நிமிட பயணம் மாதிரி இருந்தது.

நான் விமான நிலையத்திற்கு வந்தபோது, எனக்கு மிகவும் பயமாக இருந்தது. நான் விமானத்தில் உள்ளே போவது இன்றைக்குத்தான் முதல் தடவையாக இருந்தது. நான் நிறைய பேரைச் சந்தித்தேன். எனக்கு அந்த சூழல் மிகவும் பிடித்துக்கொண்டது. நிறைய உணவுகள் மற்றும் பானங்கள் இருந்தன. நான் எனது பைகளை எடுத்துக்கொண்டு, அதன் பாரத்தை சரிப்பார்த்தேன். அதற்காக, நான் எனது பைகளை ஒரு தராசின் மேலே வைத்தேன். அந்த தராசு உடனே நிறையைப் பார்த்து, எனது பைகள் கொண்டு போவதற்கு பாரம் சரியாக இருப்பதாக காட்டியது. அப்படியே நான் எனது விமானத்திற்குப் போனேன். நான் அந்த விமானத்திற்கு உள்ளே போகும் நேரத்தில், இரண்டு தமிழ் மாணவர்களைக் கண்டேன். அவர்களின் பெயர்கள் சக்தி மற்றும் கமல். நான் அவர்களை பார்த்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். நான் அவர்களை நோக்கி வணக்கம் செலுத்தினேன். அவர்களும் எனக்கு வணக்கம் செலுத்தினார்கள். அப்போதிருந்து, எங்களின் நட்பு உருவானது.

சில மணித்தியால விமானம் பயணத்தின் பின், நாங்கள் மெல்பேர்ன் விமான நிலையத்திற்கு வந்தோம். நான் அந்த விமானத்திற்கு வெளியே வரும்பொழுது, அந்த குளிர் காற்று என் முகத்தின் மேல் பட்டது. நான் உடனே எனது தடித்த குளிர் மேல் அங்கி போட்டு இறங்கினேன்.

எனக்கு உதவி செய்வதற்காக, எனது புது இரண்டு நண்பர்கள் என்னோடு வந்தார்கள். இந்த நாட்டில் பல வேறு நாட்டவர்கள் இருந்தார்கள். நான் இவர்களோடு இருப்பதே மிகப் பெருமையாக இருந்தது. நாம் மூன்று பேர் வாடகை வண்டி பிடித்து ஒரு விடுதியை கண்டுப்பிடிப்பதற்கு போனோம்.

நாங்கள் எல்லோரும் ஒரு விடுதியைக் கண்டுப்பிடித்தபின், எங்களின் பொருட்களை அங்கே வைத்துவிட்டு, குளித்து, சாப்பிட்டு, எல்லோரும் ஓய்வெடுத்தோம். அதற்கு பிறகு, நாங்கள் அந்த இடத்தை ஆராயச் சென்றோம். இந்த மாதம், குளிர் காலம் என்று நான் அறிந்தேன். இந்த நாட்டில் இருக்கும் மக்கள் என்னோடு நன்றாக இருந்தார்கள். பல வண்டிகள் எல்லா பக்கத்திலிருந்து வரும். அவை எனக்கு மிகவும் பிடித்து இருந்தது. நான் இங்கே தங்குவதற்காக நிறைய பணம் தேவைப்படுகிறது. அதனால் நான் உடனே ஒரு வேலை தேடினேன். ஒரு சின்ன வேலையே நல்லது என்று நினைத்து தேடினேன். இந்த நாட்டிலே பல சந்தர்ப்பங்கள் உண்டு. அதனாலே எனக்கு உடனே ஒரு சின்ன கடையில் வேலை கிடைத்தது.

சில மாதங்களுக்கு பிறகு, நான் அதே கடையில் வேலை செய்து, ஒரு சிறிய வீடு மற்றும் மோட்டார் வண்டியும் வாங்கி, சந்தோசமாக இருந்தேன். ஒரு நாள், நான் வேலைக்கு போகும்பொழுது, ஒரு பெரிய வாகனம் என் வண்டியை பலமாக இடிக்க "டமார்" உடனே, நான் என் கண்களை திறந்தேன். திறந்து பார்த்தால், நான் ஈழத்தின் மண்ணில் இருக்கும் எனது பழைய வீட்டில் இருந்தேன்.

அப்போதுதான் 'இது ஒரு கனவு' என்று சிவா தெரிந்துகொண்டான். இதை நினைத்து, சிவா மிகவும் வருத்தப்பட்டான். இந்த நினைவு அவனது மனதில் வைத்து, அவன் அவுஸ்த்திரேலியாவுக்கு போகவேண்டும் என்று நினைத்துக்கொண்டான்.

காலங்கள் கடந்து சென்றன. அவன் பாடசாலையில் படித்து, கல்லூரியில் படித்து பின், ஒரு பல்கலைக்கழகத்தில் படித்து, ஒரு பேராசிரியராக வந்தான். அது மட்டுமல்லாமல், அவன் பல அறிவான புத்தகங்கள் எழுதி, பல மேடைகளில் ஏறி, பல அறிவான பேச்சுக்களைப் பேசி, மிக பிரபலம் அடைந்திருந்தான் சிவா. அவனின் எழுத்தாற்றலையும் பேச்சாற்றலையும் வியந்து, உலக நாட்டிலுள்ள பெரிய அறிஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் பேச்சாளர்கள் சிவாவை பாராட்டினார்கள். இந்த இள வயதில், கடுமையாக படித்து, தன் திறமையை வளர்த்துக்கொண்ட சிவாவை பல வெளிநாட்டிலுள்ள எழுத்தாளர்கள் மற்றும் பேச்சாளர்கள் அவனை கௌரவிப்பதற்காக அழைத்தார்கள். ஆனால் சிவாவிற்கு சிறு வயதில் இருந்தே அவுஸ்த்திரேலியாவுக்கு போகவேண்டும் என்ற ஆசை இருந்தது. 'இது கனவல்லவே, இது நிஜம்தான்' என உணர்ந்து அவுஸ்த்திரேலிய அறிஞர்களின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, அதற்கு ஏற்பாடுகள் செய்து, அவுஸ்த்திரேலியாவுக்கு வந்து, இங்கே நிரந்திரமாக குடியேறினான்.

சில வருடங்களில், சிவா அவுஸ்த்திரேலியாவில் ஆங்கில மொழியில் தேர்ச்சிப்பெற்று, ஒரு பெரிய எழுத்தாளராக இருந்து, பல புத்தகங்களை எழுதி, சிறந்த ஒரு பேச்சாளராக பல நாடுகளுக்கும், சென்று பேச்சுக்களை நடத்தினான். அத்துடன், அவனது கனவில் இருக்கும் வீட்டை விட பெரியதாக வீடு வாங்கி மற்றும் மோட்டார் வண்டியும் வைத்திருந்து மிகவும் சந்தோசமாக இருந்தான்.

அவன் இதை நினைக்கும்போது, அவனக்கு ஒரு திருக்குறள் நினைவிற்கு வந்தது.

"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்."

அதாவது, முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும், முயற்சி இல்லாதிருத்தல் அவனுக்கு வறுமையைச் சேர்த்து விடும். அதனால் நாங்கள் ஏதாவது விரும்பி செய்ய வேண்டும் என்றால், அதை முழு முயற்சியுடன் செய்யவேண்டும்.

# ஒழுக்கம்

-அபிதாரணி சந்திரன்-

ஒரு சிறிய கிராமதில் பழனி எனும் ஒரு பெரியார் வாழ்ந்து வந்தார். அவருடைய மனைவி தங்கபுஷ்பம், அவருடைய மகன் ராம். ராம் பிறந்தவுடன் அவருடைய மனைவி இறந்து விட்டார்.

அச்சிறிய கிராமத்தில் ஒரே ஒரு பாடசாலை தான் இருந்தது, அதனால், பாடைசாலைக் கட்டணம் மிகவும் அதிகமாக இருந்தது. ராமுடைய எதிர்காலம் நன்றாக அமைய வேண்டும். அவன் எந்தத் துன்பங்களையும் அனுபவிக்கக்கூடாது என்பதற்காக பழனி இரவும் பகலுமாகக் கஷ்டப்பட்டு வேலை செய்தார். அந்தப் பாடசாலையில் அவனைச் சேர்த்தும் விட்டார். பழனி ராமுவுக்கு அளவுக்கு அதிகமான செல்லமும் கொடுத்திருந்தார்.

நாட்கள் செல்லச் செல்ல ராமுடைய படிப்பு திறமையாக முன்னேறிக் கொண்டிருந்தது. பாடசாலையில் திறமைக்கான பரிசில்களைப் பெற்று எல்லோரிடமும் நல்ல பெயர் பெற்றான். நல்ல வேலயைத் தேர்ந்தெடுத்து திறமையாகவும் சந்தோசமாகவும் வேலை செய்தான். ஆனால் வேலை அதிகமாக இருந்ததால் முன்பு மாதிரி அவன் அவனது தந்தையோடு நேரம் செலவிடுவது குறைந்து விட்டது.

கண்ணன் ஒரு நாள் தனக்கு வந்திருந்த கடிதங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான் . கண்ணனுடைய வேலைத் திறைமையை புகழ்ந்து அமெரிக்காவிலிருந்து அவனுக்கொரு அழைப்புக் கடிதம் அனுப்பியிருந்தார்கள், அது அவர்களுடைய வணிக நிறுவன திறப்பு விழா ஒன்றிற்கான அழைப்பிதழ்க் கடிதம்.. அதைக் கண்ணன் பெருமையுடன் தந்தையிடம் கொடுத்தான். தன் மகனின் சாதனையை பழனி எல்லோரிடமும் பெருமையுடன் சொன்னார்.

கடிதம் வந்து 2 கிழமையில் பயணச் சீட்டுக்களை வாங்கி, அமெரிக்காவுக்கு 5 மாத விடுமுறையில் கண்ணன் புறப்பட்டான். கண்ணன் புறப்பட்டதால், பழனி தனியாக இருக்கப் பயந்தார். அவருடன் உதவியாக இருக்க கஜன் என்பவரை வேலைக்காரனாக தேர்ந்தெடுத்தார். கஜன் பழனிக்கு வேலைக்காரனாக இருக்கவில்லை, அவனது சொந்த மகனைப் போலவே இருந்தான். பழனியுடன் நன்றாகப் பழகினான்.

5 மாதங்கள் முடிய, கண்ணன் வீடு திரும்பினான். பழனி கஜனைக் கண்ணனுக்கு அறிமுகப் படுத்தினான். கண்ணன் கஜனைத் தனது சொந்தத் தம்பியாக பார்த்துக்கொண்டான்.




பழனி கண்ணனுக்குத் திருமணம் செய்துவைக்க ஆசைப் பட்டார். கண்ணனும் அதற்கு சம்மதம் தெரிவித்தான். ஆனால்

கண்ணன் தன் தந்தையின் சொத்துக்களை எல்லாம் தன்வசம் ஆக்கிக்கொள்ளத் திட்டம் போடுவதைத் தந்தையின் உள்ளம் அறிந்திருக்கவில்லை.

திருமணத்திற்கு 3 மாதங்கள் இருந்தது. கண்ணன் பழனியிடம் வீட்டில் பங்கு கேட்டான். பழனி இதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. இருவருக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டது. தனது திருமணத்திற்கு தன் தந்தையை வரக்கூடாது என்று கண்ணன் கட்டளை இட்டான்.

திருமணம் நடக்கும் மண்டபத்தில் இருந்த எல்லோரும் பழனியைத் தேடினார்கள். எல்லோருக்கும் கண்ணன் தன் தந்தையுடன் நடந்த விவாதத்தைக் கேள்விப்பட்டவுடன் கண்ணனுடன் அவன் கதைக்கவில்லை. திருமண நிகழ்வும் எதிர்பார்த்தபடி சிறப்பாக நடக்கவில்லை.

**"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லாரறிவிலாதார்."**

என்ற குறளுக்கு ஏற்றாற் போலாகிவிட்டது கண்ணனது நிலமை.

கண்ணன் செய்த தவறுகளை உணர்ந்து, பழனியைத் திருமணத்திற்கு அழைத்தான். பழனியிடம் மன்னிப்பு கேட்டான். ''மன்னிப்பது மனிதத்தன்மை'' என்பதால் பழனி கண்ணனை மன்னித்து, கண்ணனையும் அவன் மனைவியையும் ஆசிர்வதித்தார்.

## படித்ததிலிருந்து ....

*-தி. கணேஸ்வரன்-*

### தைப் பொங்கல் - பொருளும் அருளும்

தைப் பொங்கல் ஜனவரி 14ம் திகதி கொண்டாடப்படும். தை பிறக்கும் இந்நாளில் தென்புறத்தில் சஞ்சரித்த சூரியன் வடபுறம் நோக்கி நகரும் நாளாக அமையும். தை மாதத்திலிருந்து ஆனி மாதம் வரையான காலத்தை உத்தராயணம் என்பர். மாரி காலத்துக்குப் பின் வரும் முதல் அறுவடையை சூரியனுக்கு அர்ப்பணித்து நன்றி செலுத்துவது தைப்பொங்கலாகும். பாலமுது சூரியனுக்குப் படைப்பதும் ஆவினங்களுக்கு அன்பு செலுத்துவதும் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் ஆகும். இதன் காரணமாக தைப்பொங்கல் தமிழர் புதுவருடத் திருநாள் என்றும், உழவர் திருநாள் என்றும் குறிப்பிடுவர். தமிழர் தைப்பொங்கல் திருநாளை, கொண்டாடத் தொடங்கிய காலம் சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன் என மதிப்பிடுவர். இக் கட்டுரை ஓர் இலக்கிய நோக்காக அமையும்.

### திருக்குறள்

திருக்குறள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் எழுதப்பட்டது என்பது சிலர் கருத்து. மொழி இயல் வல்லுனர் திருக்குறள் கி.பி. 4ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டிருக்கலாம் என்பர். எது எவ்வாறாயினும் "உழவு", "நாடு" என்ற அதிகாரங்கள் இடம் பெறும் முதல் நூல் திருக்குறளே. உழவர் ஏனைய தொழில் புரிவோரையும் தாங்குவதால் அவர்கள் உலகத்துக்கு அச்சாணி போன்றவர்கள் என்று குறள் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

**"உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து"**

அதிகாரம் 104. குறள் 1032

"நாடு" என்ற அதிகாரத்தில் நிலவளத்தோடுமக்கள் மன வளத்தைப் பற்றி ஆசிரியர் பேசுவது நோக்கத்தக்கது.

**"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வரும் சேர்வது நாடு".**

அதிகாரம் 74. குறள் 731

## இராமாயணம்

பல்லவ ஆட்சியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து சோழரின் எழுச்சி தொடங்கிய காலம் 9ம் நூற்றாண்டாகும். கம்பர் வாழ்ந்த காலமும் இதுவே. கிட்டத்தட்ட இக் காலத்தில் முதன் முதலாக தைப்பொங்கல் கொண்டாடப்பட்டது என்பதில் நியாயம் உண்டு. கம்பர், சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர். சடையப்ப வள்ளல்பால் அவர் காட்டிய அன்பு அளவற்றது. கம்பர், வால்மீகி பாடிய இராமாயணத்தை மூலமாக எடுத்து தமது பாடலை தமிழர் வாழ்க்கை நெறிக்கேற்ப மாற்றி அமைத்தார். கம்பர் வர்ணித்த சரயு நதியும் கோசல நாடும் அயோத்தி நகரும் இலட்சிய வாழ்க்கையைச் சித்தரிப்பன. சோழப் பேரரசு இன் நிலையை அடைய வேண்டும் என்பதே அவர் விருப்பம். மருதநல மக்கள்,வான் எட்டிய நெற் போர்களிலிருந்து வறியவர்க்கு உதவி செய்து மிகுதியை வண்டிகளில் நிரப்பி மண் நெளிய ஊர்வார். பாடல் பின்வருமாறு

**"எறிதரு அரிவின் சும்மை**

**எடுத்து வான் இட்ட போர்கள்**

**குறிகளும் போற்றிக் கொள்வார்;**

**கொன்ற நெல் குவைகள் செய்வார்;**

**வறியவர்க்கு உதவி, மிக்க**

**விருந்து உண மனையின் உய்ப்பார்,**

**நெறிகளும் புதைய பண்டி நிறைத்து**

**மண் நெளிய ஊர்வார்."**

நாட்டுப் படலம் 51

கம்பரின் கற்பனை ஊர் அயோத்தி நகரமாக வர்ணிக்கப்படுகிறது.

**"தெள் வார் மழையும், திரை ஆழியும் உட்க, நாளும்,**
**வள் வார் முரசம் அதிர் மா நகர் வாழும் மாக்கள்–**
**கள்வார் இலாமைப் பொருள் காவலும் இல்லை; யாதும்**
**கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லை மாதோ."**

நகர்ப்படலம் 165

தெளிந்த நீரைத் தரும் மேகமும், அலைகள் உடைய கடலும் அஞ்ச அயோத்தியில் பேரிகைகள் முழங்கும், அங்கு கள்வர் இலாமையால் பொருள் காவலும் இல்லை. கொள்வார் இல்லாமையால் கொடுப்பாரும் இல்லை. சோழப் பேரரசு எழுச்சியுற்ற காலத்தில் இந்த இலச்சியங்களின் பின்னணியில் தைப்பொங்கல் தமிழர் திருநாளாகப் பரிணமித்திருக்க வேண்டும். தைப்பொங்கல், நேர்மையான பொருள் ஈட்டத்தையும் அருள் கலந்த வாழ்வையும் வற்புறுத்தும் நாளாகும்.

# என் எதிர்காலம் எதை நோக்கி?

-வைஷ்கர்ணி சாய்ஈசன்-

உலகிலுள்ள அனைவரும் தனக்கென்று ஓர் எதிர்கால நோக்கத்தை வைத்திருப்பார்கள். அந்த வகையில் நானும் எனது எதிர்கால நோக்கத்தை கற்பனை செய்து வைத்துள்ளேன். எனது எதிர்கால நோக்கமானது, ஓர் ஆசிரியராக வரவேண்டியதுதான்.

மனிதர்களுக்கு இயல்பாகவே மூன்று விதமான பசி இருக்கும் என்று சான்றோர்கள் கூறுவார்கள். அவையாவன உடற்பசி, வயிற்றுப்பசி, அறிவுப்பசி என்பனவாகும். இவற்றுள் ஒருவனுடைய அறிவுப்பசிக்குத் தீனி போடும் ஆசிரியனே மகத்தானவன். அன்றிலிருந்து இன்றுவரை இருக்கும் பணிகளில் மேலானது ஆசிரியப் பணி என்பது பொதுவான கருத்து. மேலும், மாணவர்கள் தாம் கற்கும் ஆசிரியர்களிடமிருந்து பாட அறிவை மாத்திரமல்ல, அவ் ஆசிரியரினது நடை, உடை, பாவனை அனைத்தையுமே பின்பற்றிக் கற்கிறான் என்பது உளவியலாளர்கள் கண்ட உண்மையாகும். சுருங்கக்கூறினால் ''ஆசிரியனை மாணவன் கற்கிறான்'' என்றும் ''ஆசிரியன் மாணவரால் கற்கப்படுகின்றான்'' என்பதுமே உண்மை என்று அவர்கள் கண்டுள்ளனர். இந்தப் பின்னணியிலே எண்ணும் எழுத்தும் அறிவித்து எம்மையெல்லாம் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக்கும் பணியில் விளங்கிய என் மானசீக ஆசானைக் கண்டு, கேட்டு அனுபவித்த வகையால் நான் இவ்வாறான ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். எதிர் காலத்தில் ஒரு நல்லாசிரியர் ஆவதே எனது குறிக்கோள் ஆகும்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது ஆன்றோர் வாக்கு. குருவைத் தெய்வமாக மதிக்கும் பண்பு நமது சமூகத்திற்கு உண்டு. ''எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்'' என்ற கூற்றும் இதனையே உணர்த்துகின்றது. ஆசிரியத் தொழில் மன நிறைவைத் தரும் தொழிலாகும். கல்விச் செல்வத்தை மற்றவருக்கு இல்லை என்னாது அள்ளிக் கொடுக்க இத்தொழில் வழி செய்கிறது. ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேதம் எதுவுமின்றி அனைவருக்கும் உதவி செய்யக்கூடிய தொழில் ஆசிரியத் தொழில். இதன் காரணமாக இத் தொழிலை நான் விரும்பி, எதிர் காலத்தில் நானும் ஓர் ஆசிரியராக வருவதற்கு முயற்சிப்பேன்.

நமது அன்னை தரும் அன்னத்தை உண்ட போதிலும் மீண்டும் பசி எடுக்கிறது. ஆப்பா தரும் பொருட் செல்வமும் நாளடைவில் அழிந்து போகிறது. ஆனால் ஆசிரியர் தரும் அறிவுச் செல்வம் என்றுமே அழியாது நம்மைத் தொடர்கிறது. இத்தகைய புனிதமான தொழிலுக்கு நிகரான தொழில் வேறு எதுவுமே இல்லை எனலாம்.படிப்பவர் எல்லோரும் முன்னேறி மருத்துவராகலாம், பொறியியல் வல்லுனராகலாம், விஞ்ஞானியாகலாம், அமைச்சராகலாம். ஆனால் ஆசிரியர் ஏணிபோல் இருந்து எல்லோரையும் ஏற்றிவிடும் ஏணியாகத் திகழ்கிறார். ஆசிரியர் மாணவர்களின் எதிர் கால வாழ்வு மலரக் காரணமாக இருக்கிறார். ஆசிரியர் ஒவ்வொரு மாணவரின் உள்ளங்களிலும் நிலைத்து நிற்கிறார். பாடசாலையோடு அவர் கற்பிப்பது நின்றுவிடலாம். ஆனால் அவர் கற்பித்தது மாணவரின் வாழ்வில் இறுதிவரை நிலைத்து நிற்கிறது. இதுவே இத்தொழிலின் சிறப்பாகும்.

ஆசிரியப்பணி சிறந்த அறப்பணியாகும். அது சம்பளத்தை எதிர்பார்த்து நிகழ்வதில்லை. குருகுல கல்விக் காலம் முதல் இன்றுவரை ஆசிரியப்பணி பயன்கருதாப் பணியாக, சேவையாகவே விளங்குகிறது. இதனாலேயே ஆசிரியர்கள் உள்ளங்களில் உயிர் வாழ்பவர்களாகப் போற்றப்படுகின்றனர்.

ஆசிரியப்பணி மிகவும் பொறுப்பு வாய்ந்தது. உயிருள்ள பிள்ளைகளுடன் ஊடாடுவது, ஒவ்வொருவருக்கும் வாழ்வில் உயரும் சந்தர்ப்பங்களை ஆசிரியரால் மட்டுமே வழங்க முடியும். ஆசிரியர் உணர்வுகளின் ஊக்கியாக விளங்குகின்றனர். மாணவர்களின் மனங்களில் அறிவுப் பொறிகளைப் புகுத்துபவராகத் திகழ்கிறார். ஆசிரியர் தனது பொறுப்பை, தர்மத்தை மறந்தால் எதிர்காலம் தெருவில் அலையும் என்றார் புதுக்கவிதையாளர் ஒருவர். அவரது கவிதை இதுதான்...

*"வழக்கறிஞரின் தவறுகள்*
*தூக்கில் தொங்கும்.*
*மருத்துவரின் தவறுகள்*
*மண்ணில் புதையும்.*
*ஆசிரியரின் தவறுகளோ*
*தெருவில் அலையும்."*

இதன்மூலம் ஆசிரியப் பணி எத்தகு பொறுப்பு வாய்ந்த்து என்பது நன்கு புலனாகும்.

''இன்றைய குழந்தைகளே நாளைய தலைவர்கள்.'' இந்தக் குழந்தைகளுக்கு அன்பைச் சொரிந்து, அறிவைப் புகட்டி பக்குவப்படுத்தி நல்மனிதர்களாக வாழவிடுவதே ஆசிரியரின் பணி. மனித நேயம் என்றால் எது என்று அறியாது, மனம் போன போக்கிலே வாழும் இன்றைய நிலைமையை மாற்றி பாரிய சுமைகளையும் சுமக்கக்கூடிய தலைவர்களை உருவாக்கும் பணி ஆசிரியப் பணி. இக் கொள்கைகளில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு. எனவே நான் படித்து, தகைமைகள் பல பெற்று என் வாழ்வில் ஓர் ஆசிரியராக வருவதையே அதிகம் விரும்புகிறேன்.

நான் ஓர் ஆசிரியரானால் பிள்ளைகளை அன்பு வார்த்தை கூறி அரவணைப்பேன். பாடத்தைப் போதிக்கும்போது அவன் விரும்பும் போக்கிலே, நின்று கற்பிப்பேன். நான் சொல்வதை அவன் கேட்டு நடக்கவேண்டும். நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது என் விருப்பமானாலும், பாடம் படிக்குமபோது மாணவன் சுதந்திரமாக கற்க என்னென்ன வழிகாட்டல் தேவையோ அதை வழங்குவேன். கற்பது மாணவன்தான், நான் அவன் கற்க ஒரு தூண்டி அல்லது வழிகாட்டியே என்பதை நான் அறிவேன்.

நிறைந்த தெளிவான அறிவுடைய ஆசிரியரே மாணவர்க்குச் சீராகக் கல்வி கற்பிக்க முடியும். அதனால் நான் என் அறிவை வளர்ப்பதற்காகப் பலவேறு நூல்களைப் படிப்பேன். ''நல்ல ஆசிரியர் இறக்கும்வரை மாணவன்'' என்பார்கள். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவன் அறிவு நபல்களைப் படிப்பான் என்பதே இதன் கருத்தாகும். நான் அறிவுடையவனாக இருந்தாற்றான் மாணவர்களுக்கு விரிவாகவும் விளக்கமாகவும் கற்பிக்க முடியும். மாணவர்கள் எப்போதும் ஆசிரியர்களின் நடை, உடை, பாவனைகளைப் பின்பற்றி நடக்கும் சுபாவம் உடையவர்கள். நான் ஆசிரியரானால் நல்லொழுக்கம் உடையவனாக, நாலுபேர் பாராட்டும் பண்பினனாக இருப்பேன். அன்பு, பொறுமை, இன்சொல் பேசல், நன்றிமறவாமை, பணிவு முதலிய நற் பண்புகளை வளர்த்துக் கொள்வேன். என்னைப் பார்த்து என்னிடம் கற்கும் மாணவர்களும் இப் பண்புகளை வளர்த்துக் கொள்ள வழி காட்டுவேன். மாணவர்கள் எந்நிலையில் உயர்ந்தாலும் ஆசிரியர்களை நினைத்து, மதிக்க வேண்டும் என்ற உண்மையை அவர்களுக்குப் போதிப்பேன். கல்வியென்பது இனிமையான அனுபவங்களிந் தொகுப்பே என்பதை உணர்த்துவேன். கல்வியினால் ஒருவன் பெறக்கூடிய இந்பத்தை எடுத்துச் சொல்வேன். எல்லாச் செல்வங்களையும், பேறுகளையும் மனிதன் பெற்றாலும் கல்வியைப்போல சிறந்த செல்வம் அவனுக்குக் கிடையாது என்ற உண்மையை பல எடுத்துக் காட்டுக்களாலும், கதைகளாலும் புகட்டுவேன். என் அன்பான வழிகாட்டுதலும், அனுசரணையும் பெறும் மாணவர்கள் நிச்சயமாக ஆர்வத்துடன் கற்பார்கள். அறிவைப் பெருக்கிக்

கொள்வார்கள். அதன் பிறகு அவர்கள் பெரிய பெரிய பதவிகளையும் பெறுவார்கள்.

ஒரு மனிதனுடைய வாழ்வில் அவன் அடிப்படைக் கல்வியைப் பெறும் பாடசாலை மட்டத்தில், நல்ல வழியில் வழிநடத்தும் மேய்ப்பானாக, மாணவப் பயிர்களை நல்ல வகையில் விளைய வைக்கும் தோட்டக்காரனாக என்னை ஆக்கிக்கொள்வேன் என்னும் என் இலட்சியக் கனவில் மிதக்கிறேன்.

## பழமொழிகள் தற்காலத்திற்கும் பொருந்துமா?

-ஹரிஜன் பசுபதிதாசன்-

பழமொழிகள் முன்னோர்களால் பழைய காலத்தில் உருவாக்கப்பட்டவை. பழங்காலத்தில் வாழ்க்கைமுறையைப் பழமொழிகள் வலியுறுத்தின. ஆனால் தற்காலத்தில் இருக்கும் ஒரு பெரிய கேள்வி, பழமொழிகள் தற்காலத்திற்குப் பொருந்துமா? தொழில் நுட்ப சாதனங்களும், நவீன் வளர்ச்சியும் அடைந்த தற்கால உலகில், பழங்காலத்தில் உருவாக்கப்பட்ட பழமொழிகள் பொருந்துமா? ஆம், பொருந்தும் என்பதுதான் சரியான விடை. தற்காலத்திற்கும் பழங்காலத்திற்கும் பெரிய வேறு பாடுகள் இல்லை. நம் செயல்களில் மட்டும் தான் வித்தியாசங்கள் இருக்கின்றன. ஆனால் நடைமுறைகளிலும் பழக்க வழக்கங்களிலும் அல்ல. இதற்கு உதாரணங்களும் விளக்கங்களும் கீழே.

உலகம் எவ்வளவு மாறினாலும் எமது உணர்வுகள் மாறாது. பண்டைய காலத்தில் கோபம் உண்டு, தற்காலத்திலும் கோபம் உண்டு. பழங்காலத்தில் மகிழ்ச்சி உண்டு, இன்றைய காலத்திலும் மகிழ்ச்சி உண்டு. இவைபோன்று கர்வம், பொறாமை, சுயநலம், திமிர் என்ற உணர்வுகள் உலகம் அழிந்தாலும் கூட மாறாதவை. உதாரணத்திற்கு, "ஆத்திரக் காரனுக்குப் புத்தி மத்திமம்." இப்பழமொழி கோபமானவர்களால் சரியான முடிவுகள் எடுக்க முடியாது என்று கூறுகிறது. இந்தப் பழமொழி பண்டைய காலத்திற்கும், தற்காலத்திற்கும் பொருந்தும். எனவே, உணர்வுகள் பற்றிய பழமொழிகள் எந்த ஒரு காலத்திற்கும் பொருந்தும்.

பழக்கங்களும் நடைமுறைகளும் மாறாதவை. நாம் பழங்காலத்தில் இருந்து பின்பற்றி வரும் முறைகளும் பழக்கங்களும் மாறாதவை. பண்டைய காலத்தில் செய்தவை இன்றைய காலத்திலும் மாறாதவை. ஓர் உதாரணம், "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு." நமது வாழ்க்கையில் பல ஆசைகள் இருக்கும். இது பழங்காலத்திற்கும் தற்காலத்திற்கும் பொருந்தும். சிலர் பேராசைப் படுவார்கள். இப்பழமொழி, எதையும் ஆசைப்பட்டாலும் அளவோடு ஆசைப்படவேண்டும் என்று கூறுகின்றது. பேராசைப் பட்டால் அல்லது அளவுக்கதிகமாக ஆசைப்பட்டால் பல எதிர் விளைவுகளை சந்திக்கவேண்டும் என்று காட்டுகிறது. எனவே, பழங்கால பழக்கங்களும் நடைமுறைகளும் தற்காலத்திலும் மாறாதவை.

சில பழமொழிகள் பல சந்தர்ப்பங்களில் தற்காலத்தில் மட்டுமல்லாமல் எந்த ஒரு கால கட்டத்திலும் பொருந்தாதவை போன்று இருக்கும். உதாரணத்திற்கு, "பழகப் பழக பாலும் புளிக்கும்." நாம் ஒன்றுடன் பழகப் பழக, அது அலுத்துவிடும் என்பதை இது காட்டுகிறது. ஆனால் நட்புக்கு இது பொருந்தாது. நண்பர்கள் பழகப் பழகத் தான் கூட நெருங்குவார்கள். இவைபோன்று, சில பழமொழிகள் எந்த ஒரு காலகட்டத்திற்கும் பொருந்தாதவை. எனவே, மேலே குறிப்பிடப்பட்ட காரணங்களால், பழமொழிகள் தற்காலத்திற்கும் பொருந்தும் என்று தீர்மானிக்க முடிகின்றது.

# சண்முகத்தின் கதை

- ஜேகே - www.padalay.com -

தன் முயற்சியில் சற்றும் தளராத விக்கிரமாதித்தன் முருங்கை மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த வேதாளத்தை மீண்டும் பிடித்துத் தோளில் போட்டபடி நடக்க ஆரம்பித்தான். அப்போது வேதாளம் அவனைப்பார்த்துச் சற்று எள்ளலுடன் கூறியது.

"ஏ விக்கிரமாதித்தியா, நானும் பார்த்துக்கொண்டே வருகிறேன், நீயும் கடமை துஞ்சாது சதா என்னை முருங்கை மரத்திலிருந்து பிடித்துக்கொண்டு செல்கிறாய். நானும் எப்படியோ தப்பி மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிவிடுகிறேன். இப்படியே உன்னுடைய காலம் கழிகிறது. நீ பிழைக்கத் தெரியாதவனாக இருக்கிறாய். உனக்கு நான் ஒரு கதை சொல்லி இறுதியில் சில கேள்விகளைக் கேட்கப்போகிறேன். அந்தக்கேள்விகளுக்கு உனக்குச் சரியான பதில் தெரிந்திருந்தும் சொல்லாவிட்டால் உன் தலை சுக்கல் நூறாக வெடித்துச் சிதறிவிடும்"

விக்கிரமாதித்தன் அதற்கு ஆமோதித்துத் தலையாட்டவும், வேதாளம் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தது.

000


அறிவுபுரம் என்கின்ற கடற்கரைக்கிராமத்தில் சண்முகம் என்கின்ற குடியானவன் தன் மனைவியோடும் இரண்டு மகள்மாரோடும் வாழ்ந்துவந்தான். கூடவே சண்முகத்தின் வளர்ப்பு நாயும் அவர்களோடு சேர்ந்து வளர்ந்தது. சண்முகம் அந்தக் கிராமத்தின் தூண்டில் மீன்பிடிகாரன். அவன் அக்கிராமத்து மீன்பிடி சங்கத்தின் நடப்புத் தலைவனுமாவான்.

சண்முகம் அதிகாலையிலேயே துயிலெழுந்துவிடுவான். காலைக்கடன்களை முடித்து, தேநீர் ஊற்றிக் குடித்துவிட்டு அவன் வேலைக்குப் புறப்படத்தயாராகும்போது காலை மூன்றுமணிகூட ஆகியிருக்காது. அவன் மனைவியும் மகள்களும் அப்போது ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பர். போகும்போது, சண்முகம் அவர்களின் கால்களை, தான் எப்போதும் கூடவே வைத்திருக்கும் கைத்தடியால் இடறிவிட்டபடியே கடந்து செல்வான். அங்கே வாசலில் அவனுக்காகக் காத்து நிற்கும் வளர்ப்பு நாய் அவனைக் கண்டதுமே எசமான விசுவாசத்தோடு சின்னதாகக் குரைத்துவைக்கும். அதன் தலையைத் தேடித் தடவிவிட்டபடி சண்முகம் கொல்லைப்புறத்துக்குச் சென்று, அங்கு குவிந்துகிடக்கும் மீன்வலைகளைக் கால்களால் ஒதுக்கிவிட்டு, சுவரில் சாய்த்துவைத்திருந்த தூண்டிலையும் ஒரு மீன் கூடையையும் எடுத்துக்கொள்வான்.

சண்முகமும் நாயும் கடற்கரையை நோக்கி நடக்க ஆரம்பிப்பார்கள்.

கடற்கரையை அண்மித்ததும் சண்முகத்தின் நாய் தன்பாட்டுக்கு எடுபட்டு அலைய ஆரம்பிக்கும். சண்முகம் அதனைத் தன் அருகிலேயே நிற்குமாறு கூவி அழைப்பான். நாய் கேளாது. கொஞ்சநேரம் அதனைக் கூப்பிட்டுப்பார்த்துவிட்டு பின்னர் அவன் அமைதியாகிவிடுவான். கடற்கரையில் ஒருபக்கம் அலைகளின் சத்தம். இன்னொருபக்கம் பனங்காட்டிலிருந்து ஓலைகள் காற்றில் அடித்துக்கொள்ளும் சத்தம். சண்முகத்துக்கு சற்றுக் குழப்பமாகவிருக்கும். யோசிப்பான். நாயை மீண்டும் ஒருதடவை கூப்பிட்டுப்பார்ப்பான். பயனிராது. பின்னர் ஒரு முடிவெடுத்தவனாய்

பனைக்காட்டை நோக்கி உட்கார்ந்தபடி தூண்டிலை எடுத்து வீசுவான். கரையை நோக்கி.



பொழுது மெதுவாகப் புலர ஆரம்பிக்கும். இரவில் கடலுக்குச் சென்றவர்கள் கரைக்குத் திரும்ப ஆரம்பிப்பார்கள். மீன் வியாபாரிகள் கூடையும் கையுமாய் கடற்கரைக்கு விரைவார்கள். ஆளரவமற்றுக்கிடந்த மீன்வாடி திடீரென்று உயிர் பெற ஆரம்பிக்கும். சண்முகத்தின் மனைவியும் மகள்களும்கூட அங்கு வந்துவிடுவர். அவர்கள் களங்கண்டி மீன் பிடிப்பவர்கள். கடலுக்குள் இறங்கி, முந்தைய நாள் கட்டிய களங்கண்டி வலைகளை அவர்கள் மிகக்கவனமாகக் கழட்டிச் சுருட்ட ஆரம்பிப்பார்கள். மகள்களில் ஒருத்தி அன்றைய பொழுதுக்குரிய வலையைப் பொருத்தமான இடம் தேர்ந்து ஊன்ற ஆரம்பிப்பாள். அவர்கள் வந்ததைக் கண்ட சண்முகத்தின் நாய் கரையில் நின்று அவர்களை நோக்கி ஆக்ரோசத்துடன் குரைக்க ஆரம்பிக்கும்.

சண்முகம் இப்போதும் தான் மணலினுள் வீசிய தூண்டிலில் ஏதேனுமொரு மீன் சிக்குமெனப் பொறுமையுடன் காத்திருப்பான். நேரம் மதியத்தைத் தாண்ட ஆரம்பிக்கும். தாம் பிடித்த மீன்களைக் குத்தகைக்காரர்களுக்கும் ஏல வியாபாரிகளுக்கும் மொத்த வியாபாரிகளுக்கும் கொடுத்துவிட்டு, வீட்டுக்குத் தேவையான மீன்களோடு மீனவர்கள் புறப்பட ஆரம்பித்திருப்பர். சந்தையிலும் கூட்டம் குறைய ஆரம்பித்திருக்கும். சிலர் இறுதிநேரத்து மலிவு மீன்களுக்காக இன்னமும் காத்திருப்பர். சண்முகத்தின் மனைவியும் பெண்களும்கூட தாம் பிடித்த களங்கண்டி மீன்களை விற்றுவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டிருப்பர்.

இப்படி வீடு திரும்பும் அத்தனைபேரும் போகும் வழியில் மணலில் தூண்டில்போட்டு மீனுக்காகக் காத்திருக்கும் சண்முகத்தைக் கவனிப்பர். அவனோடு அளவளாவுவர். கதைகள் பல பேசுவார்கள். தத்தமது கூடைகளில் இருக்கும் விற்கமுடியாத நாறிய சல்லித் திரளிகளையோ அல்லது முள் நிறைந்த கொய் மீன்களையோ போகிறபோக்கிலே அவர்கள் சண்முகத்தின் தூண்டிலில் செருகிவிட்டு, தூண்டிலின் நூலையும் சற்று இழுத்துவிட்டுப் போவர்.

சண்முகத்துக்கு மணலில் மீன் பிடிபடத்தொடங்கும். ஒவ்வொருதடவையும் சண்முகத்தின் தூண்டிலில் யாரேனும் மீனைச் சொருகிவிட்டபின்னர், அவன் தூண்டிலைக் கவனமாக இழுத்து எடுத்து, அதன் முள்ளில் குத்தப்பட்டிருந்த மீனை இலாவகமாக அகற்றி, கொண்டுவந்திருந்த கூடையினுள் போடுவான். இப்போது சண்முகத்தின் நாய் அவனருகே வந்து நின்று மகிழ்ச்சியில் குரைக்க ஆரம்பிக்கும். அதன் வால் மின்விசிறி வேகத்தில் சுழலும். "இப்போதுதான் மீன் பட ஆரம்பித்திருக்கிறது, குரைத்துக் கெடுக்காதே" என்று சண்முகம் தன் நாயைச் செல்லமாக வைவான். கூடையில் கிடக்கும் ஒரு மீனை அதனிடம் வீசி எறிவான்.

மதியத்துக்கு மேலே இரண்டு மணியளவில் சண்முகத்தின் தூண்டிலில் மீன் படுவது குறைந்துவிடும். அவனும் கனம் தாளாத அவனுடைய மீன் நிறைந்த கூடையோடு, தூண்டிலையும் எடுத்துக்கொண்டு பெருமிதச் சிரிப்போடு கள்ளுத்தவறணையை நோக்கிச் செல்வான். அங்குதான் அந்தக்கிராமத்தின் அத்தனை மீனவர்களும் தொழிலுக்குச்

சென்று திரும்பியபின்னர் கூடுவார்கள். சண்முகம் செல்கின்ற சமயம் அங்கே கூட்டம் நிறைந்து இருக்கும். சண்முகம் தவறணைக்காரரிடம் தன் மீன்கூடையைக்கொடுத்துவிட்டு கள்ளு வாங்கிக்குடிப்பான். வீட்டுக்கென சில மீன்களை அவன் எடுத்துவைக்கவும் மறப்பதில்லை. தவறணையில் பலரும் பத்தும் பேசுவார்கள். சண்முகத்தை சிலர் எள்ளி நகையாடுவார்கள். சிலர் கழிவிரக்கம் கொள்வர். அவனுடைய பெண்களில் நாட்டம்கொண்ட சிலர் அவனோடு அன்பு பாராட்டவும் தவறுவதில்லை. சிலர் அவனுக்குக் கள்ளு வாங்கிக் கொடுப்பர். சிலர் சுருட்டு, பீடி எனப் புகைக்கக்கொடுப்பர். வெற்றிலை சீவல் கொடுப்பர். சண்முகம் அன்றையதினம் எப்படி மதியத்துக்குப்பிறகு தனக்கு மீன் 'பட' ஆரம்பித்தது என்று பெருமையாக விவரிக்க ஆரம்பிப்பான். கூட்டம் அவனைச்சுற்றிக் கூடியிருந்து சுவாரசியத்தோடு கதை கேட்கவும், அந்த இடமே களை கட்ட ஆரம்பிக்கும். தினமும் தவறணையில் தன்னைச்சுற்றிக் கூடும் அந்தக்கூட்டத்தை நம்பியே கிராமத்து மீனவ சங்கத் தேர்தலில் தலைவர் பதவிக்கு சண்முகம் துணிச்சலோடு போட்டியிட்டான். அவன் நம்பிக்கையை அந்தக்கூட்டமும் வீணாக்கவில்லை. முதல்தடவையே தலைவர் தேர்தலில் வென்றது மாத்திரமன்றி, அடுத்தடுத்த தேர்தல்களிலும் வென்று, மீனவ சங்கத்தின் நிரந்தரத் தலைவனாக சண்முகம் தன்னை நிலைநிறுத்திக்கொண்டுவிட்டான்.

இப்படியாக, அதிகாலையில் கடற்கரைக்குப் புறப்படும் சண்முகம், தரையில் மீன் பிடித்து, பின்னர் தவறணையில் தற்பெருமைபேசி, இடையிடையே மீனவ சமூகத்தின் பிரச்சனைகளை அலசி, நிறை வெறியோடு வீடு திரும்பும்போது இரவு எட்டு மணியைத் தாண்டியிருக்கும். வருபவன், நேரே மனைவியை அழைத்து அவளிடம் மீன்களைக் கொடுத்து, குழம்பும் பொரியலும் செய்யுமாறு ஆணை பிறப்பித்துவிட்டு, கொல்லைப்புறத்துக்குச் சென்று தன் தூண்டிலைக் கவனமாகச் சாய்த்துவைப்பான். பின்னர் கிணற்றடியில் தானும் குளித்து, தன் நாயையும் குளிப்பாட்டிவிட்டு வீட்டுக்குள் நுழையும்போது சுவையான களங்கண்டி பாரை மீன் கறியும் அறக்குளா பொரியலும் புட்டோடு அவனுக்காகக் காத்திருக்கும். வயிறு புடைக்க அவற்றை ருசித்துச் சாப்பிட்டு முடித்துவிட்டு, பெருத்த ஏவறை ஒன்றை விட்டவாறே சண்முகம் தன் மனைவியிடம் பெருமை தாளாமல் சொல்வான்.

"சண்முகம் பிடிச்ச மீன் எண்டால் சும்மாவா?"

000

கதையைச் சொல்லிமுடித்ததும் வேதாளம் விக்கிரமாதித்தனை நோக்கிக் கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தது.

"விக்கிரமாதித்தா, இந்தக் கதையில் மீன் கடலில் கிடைக்குமா, தரையில் கிடைக்குமா என்பதுகூடத் தெரியாத சண்முகம் எப்படி ஒரு மீனவ குழுமத்தினுடைய தலைவராக முடிகிறது? இதில் தவறிழைப்பவர்கள் எவர்? சண்முகமா? அல்லது அவனைத் தம் தலைவனாக்கி அழகுபார்க்கும் சமூகமா? அல்லது அவனது மனம் நோகாதவண்ணம் அவனுக்கேற்ப வளைந்துகொடுத்து குடும்பம் நடத்தும் அவனுடைய மனைவி மக்களா? நீ என்ன நினைக்கிறாய்?

விக்கிரமாதித்தன் சற்றுநேரம் யோசித்துவிட்டுப் பின்னர் தன் பதிலைக் கூற ஆரம்பித்தான்.

***விக்கிரமாதித்தன் வேதாளத்துக்குச் சொல்லிய பதில் இறுதிப்பக்கத்தில்.***

# நான் வாழும் சூழலும் எனது கல்வியும்

-கஜானனன் சாய்ஈசன்-

இவ் இருபதாம் நூற்றாண்டிலே எமது பெயரை நிலைநிறுத்திக் கொள்வதற்கு அத்தியாவசியமான காரணிகளாக எமது சூழலும் கல்வியும் அமைந்துள்ளன. ஒரு மனிதனின் வாழ்க்கைப் போக்கையும் வளர்ச்சிப் போக்கையும் மாற்றி அமைக்கக்கூடிய ஆற்றல் இவ்விரு காரணிகளுக்கும் உண்டு. எமது சூழலும் கல்வியும் பற்றி நோக்க முன்னர் சூழல், கல்வி ஆகிய பதங்களின் தெளிவைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

மனித நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாக சூழலைக் கூறலாம். குறித்த நபரின் செயற்பாடுகள் சூழலுக்கு இசைவானதா இல்லையா என்பதற்கு இணங்க அந்நபரை மதிப்பீடு செய்து கொள்ள முடியும்.

கல்வி என்பது அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு மார்க்கம் ஆகும். நாம் பெற்றுக்கொண்ட கல்வியானது சமூகத்தில் எமக்குரிய மதிப்பையும் அந்தஸ்தையும் வழங்குகிறது. கல்வியின் முக்கியத்துவம் என்பது ஆரம்ப காலங்களில் பெரிதும் உணரப்பட்டதோ இல்லையோ கல்வியின் தேவை எக்காலத்திலும் வலியுறுத்தப்பட்டது என்பது நிதர்சனமான உண்மையாகும்.

சூழல் கல்வி ஆகிய இரண்டையும் ஒப்பு நோக்குமிடத்து மனித வாழ்வின் செம்மையைத் தீர்மானிக்கும் காரணிகளாக இரண்டும் அமைந்து இருப்பது புலன் ஆகும். மேலும், இரண்டும் ஒன்றில் ஒன்று பரஸ்பரம் தங்கியுள்ளன. அதாவது, ஆரோக்கியமான முரண்பாடுகள் அற்ற ஒரு சூழலானது கல்வியின் மூலம் கட்டியெழுப்பப்படுவதுடன் கல்வி விருத்திக்கு சூழலின் பங்கு தவிர்க்க முடியாததாகும்.

முன்னைய காலங்களில் கல்விக்கான சூழல் வரையறுக்கப்பட்டே இருந்தது. கல்விக்கான நாட்டத்தைப் பெரும்பாலானோர் கொண்டிருக்கவில்லை. எனவே, கல்வியின் அவசியத்தை அறிந்த புலவர்கள் பலரும் அதன் தார்ப்பரியத்தை வலியுறுத்தி கல்வி மீதான நாட்டத்தை மக்களிடம் தூண்டினர். எடுத்துக்காட்டாக

*"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்றை யவை "*

*(அதிகாரம்:கல்வி குறள் எண்:400)*

என்ற குறளிலே, ஒருவழுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வியைத் தவிர ஏனைய பொருட்கள் அவ்வாறான சிறப்பிற்குரியவை அல்ல என்று கூறுவதன் ஊடாகக் கல்வியின் சிறப்பு வலியுறுத்தப்பட்டது. மேலும், ‘‘மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்...’’ என்ற பாடலில் மன்னனைக் காட்டிலும் சிறப்புடையவன் கற்றவனே ஆவான் எனக் கற்றவரின் சிறப்புக் கூறப்படுகிறது. கல்வி என்பது ஆண்களுக்கு மட்டுமானதல்ல, பெண்களுக்கு கல்வியைப் பெறும் உரிமை உண்டு என்பதும் ஆரம்பகாலப் புலவர்களால் கூறப்பட்டதொன்றாகும். ’’குஞ்சியழகும் கொடுத்தானைக் கோட்டழகும்...’’ என்ற பாடலை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இவ்வாறாகக் கல்வி பற்றி ஆரம்ப காலப் புலவர்கள் இட்ட விதையானது இன்று மாபெரும் விருட்சமாக வளர்ந்துள்ளது. அனைவரும் கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வி முறையானது ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடின்றி அனைவரும் சமூகத்தில் சம வாய்ப்புக்களைப் பெற வழி கோலியிருக்கிறது. கட்டாயக் கல்வி வலியுறுத்தப்படுவதனால் அனைத்து இன மக்களும் தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள முடிகிறது. இவ்வாறாகக் கல்விக்கு அமைய எமது சூழலும் மாற்றமடைந்திருப்பதைக் காணலாம். சாதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்த எமது சமூகமானது கற்றவர்களுக்கு அந்த முக்கியத்தை அளித்து இருக்கிறது. கல்வி


கற்றவர் யாராயினும் சமூகத்தில் உயர்ந்த நிலையை அடைய முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறது. கல்வியின் வளர்ச்சிக்குத் துணையாக சூழல் இருப்பதைப் பார்த்தபோதிலும், அதே சூழலினால் இன்று கல்வியானது அதன் சிறப்பை இழந்து வருகிறது என்பது வருத்தத்திற்குரிய ஒரு விடயமாகும். இப் போட்டிகரமான உலகில் வாழ்க்கையைத் திறம்பட வாழக் கல்வி இன்றியமையாததொன்றாக இருக்கின்றபோதிலும், பல்வேறு சந்தர்ப்பங்களில் அது எமது சூழல் மூலம் திணிக்கப்படும் ஒன்றாகக் காணப்படுகின்றது.

எந்தக் கல்வியைக் கற்றால் சமூகத்தில் உயர்ந்த நிலையை அடையலாம் எனவும், அதிக பணத்தை ஈட்டலாம் எனவும் சிந்திக்கின்ற சமூகமானது, தனிப்பட்ட விருப்பங்களையும் மனத் திருப்திகளையும் ஓரம் தள்ளிவிடுகின்ற ஒரு சூழல் இப்போது காணப்படுகின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். எமது நாட்டிலும் கூட மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வி போன்றவற்றைப் பெரிதாகப் பேசும் பொழுது ஏனைய துறைகள் கல்வி இல்லையா என்ற கேள்வி எழுகின்றது. மாணவர்கள் விருப்புடனும், ஆர்வத்துடனும் கல்வியைப் பெறவேண்டுமே ஒழிய சூழலின் அழுத்தத்தால் பெறக் கூடாது.

கல்வி என்பது அறிவைப் பெற்றுக் கொள்ளும் மார்க்கமே தவிர அது வரையறுக்கப்பட்டில்லை. எம்மை நல் வழிப்படுத்தி சமதாயத்தில் எமக்கான அந்தஸ்தைப் பெற்றுக் கொள்ள வழிவகுக்கும் எந்தக் கல்வியும் மதிக்கப்பட வேண்டியதாகும். இம் மதிப்பை ஏற்படுத்த வேண்டியது எமது சூழலின் கடமையாகும்.

# வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை ஆராய்வான் செய்க வினை

தெழிநுட்ப ஆற்றலில் தன் வளத்தை பெருக்கி இன்று மின்சாரத்தில் அதிவேகமாக ஓடக்கூடிய மோட்டார் வாகனத்தை கண்டுபிடித்தலோடு நின்று விடவில்லை டெஸ்ல நிறுவனத்தின்



முதன்மை முகாமையாளர் எலோன் மஸ்க். இவர் தென் அவுஸ்ரேலியாவின் அரசுடன் 100 நாட்களிலே மின்சாரத்தை சேமிக்கும் உலகின் மிகப்பெரிய லித்தியம்- ஐயன் மின்கலத்தை தன்னால் அமைக்கமுடியும், அவ்வாறு 100 நாட்களிலே 300,000 இல்லங்களை ஒளியூட்டும் இக்கலத்தை அமைக்காவிடின் தான் அதை இலவசமாக கையளிப்பதாகவும் ஒப்பந்தம் செய்தார்.

வள்ளுவன் குறளைப்போல் வளங்களை பெருக்குவது மட்டுமல்ல அப்போது ஏற்படும் சவால்களையும் நன்கு ஆராய்ந்து வென்று முடிக்கும் செயல்வீரனான எலோன் மஸ்க், தன் வாக்குபடி 100 நாட்களில் இம் மின் கலத்தை அமைத்ததோடு லோ யான்ங் கரி-மின் உற்பத்தி நிலையம் டிசம்பர் 17 இல் செயலிழந்த போது அதிவேகமாக (140 மில்லி செக்கன்டுகளில்) அதனால் பிறப்பிக்ககூடிய மின்சாரத்தை இக்கலம் வழங்கும் அளவிற்கு சிறப்பாகவும் நிறுவியுள்ளார். இது சூழலை மாசுபடுத்தாமல் காற்றாடிகளில் இருந்து வரும் சக்தியை சேமித்து வழங்கும் ஓர் மூலமாகும். இந்த வெற்றியை தொடர்ந்து விக்டோரியா அரசும் மினகலம் அமைக்கும் இவர் சாதனைக்கு சம்மதம் வழங்கியுள்ளது.

*-இப்படிக்கு இளவேனில்-*

# பறை

**நேர்காணல் - ஆவூரான்**

*அவுஸ்ரேலியத் தமிழர் கலைகயம் என்ற அமைப்பை உருவாக்கி தமிழரின் பாரம்பரிய கலைகளை அவுஸ்ரேலிய மாநிலங்கள் எங்கும் சென்று அங்குள்ள தமிழர் அமைப்புகளுடன் இணைந்து தான் கற்றதை மற்றவர்களுக்கும் கற்பிக்கும் தன் ஆர்வத்தை முதன்மையாகக் கொண்டு இயங்கும் அண்ணாத்துரை அவர்களை பறை இசைப் பட்டறை நிகழ்வை மெல்பேர்ன் கேசித் தமிழ் மன்றத்துடன் இனைந்து கற்பித்துக் கொண்டிருக்கும் போது இளவேனில் சஞ்சிகைக்காகா அவரை நேர்கண்ட போதுஅவரிடம் இருந்து பெற்றுக் கொண்டவை கீழே.*

**அவுஸ்திரேலிய தமிழர் கலையகத்தின் நோக்கம் அதன் செயற்பாடுகள் பற்றி?**

*அடெலெயிட்டில்2014 ஆண்டு சிறிய குழுவாகத் தொடங்கப் பட்ட இவ்வமையம் பண்டைய கலைகளை அவுஸ்ரேலியாவில் உள்ள தமிழ் மக்கள் கற்க வேண்டும் கற்பிக்க வேண்டும் மேலும் மற்றைய இன மக்களுக்கு எமது அடையாளங்களை கலைகளினூடாகக் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கத்திலும், இப்படியான கலைகளை முன்னெடுப்பதிலும் ஊக்கப்படுத்துவதிலும் நாம் முனைந்து நிற்பதோடு எமது வளரும் சிறார்களுக்குத் தமிழ் அடையாளத்தை அவுஸ்திரேலியாவில் நிலை நாட்டுவதும் எமது நோக்கம் ஆகும்..*

**எந்தெந்தக் கலைகளை முன்னெடுக்கிறீர்கள் யார் மூலமாகக் கற்பிக்கப்படுகிறது?**

*தமிழர்களின் தொன்மையான கலைகளையும், இங்கு நாம் கற்பவர்களுக்கான ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில் ஒன்பது விதமான ஆட்டக் கலைகளை அடையாளம் கண்டு இக் கலைகளில் நோக்கிச் சென்ற கலைஞர்களை தமிழ் நாட்டில் சந்தித்து அவர்களிடம் சில பயிற்சிகளைப் பெற்று அந்தப் பயிற்சிகளை இங்குள்ள எமது நண்பர்களுக்கு கற்றுக் கொடுப்பதாக நாம் கடந்த இரண்டு ஆண்டுகளாக பயணித்துக் கொண்டிருக்கிறோம். இந்த வகையில் பறையாட்டம், கரகாட்டம், காளையாட்டம் மயிலாட்டம் புலியாட்டம் பின்னல் கோலாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், மற்றும் பரத நாட்டியக் கலை ஆகிய கலைகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம். எமது நோக்கம் கற்போம் கற்பிப்போம்.*

**அடெலைட்டில் அவுஸ்திரேலிய தமிழர் கலையின் செயற்பாடுகளை தமிழர் அல்லாதவர்களும் தமிழர்களும் எப்படி வரவேற்கிறார்கள்?**

*இந்த இரண்டு ஆண்டுகளில் பலவிதமான பல்லின கலாச்சார நிகழ்வுகளில் நம்முடைய கலைகளை நாங்கள் கற்றுக்கொண்டதை தமிழர் அல்லாத மககளுக்கு*



*அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். அந்தவகையில் கடந்த ஆண்டு "வெல்கம்*

*அவுஸ்திரேலியா" என்ற மாபெரும் பேரணியில், முதன் முதலாக நாம் அறிமுகப் படுத்தினோம். அதனைத் தொடர்ந்து ----- மேலும் பல கலை நிகழ்ச்சிகளை நடாத்தினோம். முக்கியமாக பல்லின கலாச்சாரத்தை கொண்ட மக்கள் எமது கலைகளை மிகவும் ஆர்வத்தோடு கண்டு களிப்பதைப் பார்க்கும்போது தமிழர்களாகிய எமக்கு பெருமையாக இருக்கிறது.*

**அவுஸ்திரேலிய தேசம் முழுவதும் தமிழர் கலைகள் 2020 அதன் செயற்திட்டம் நோக்கம் பற்றி?**

*கடந்த ஆண்டு 2017 தை மாதம் மெல்பேர்னில் கேசித்தமிழ் மன்றம் ஏற்பாடு செய்திருந்த தைப் பொங்கல் விழாவை முன்னிட்டு முதல் நாளில் சிறுவர்களுக்கான பறை இசைப் பட்டறையை நடாத்தினோம். அந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட சிறுவர்கள், அவர்கள் கற்ற விதம் அவர்கள் காட்டிய ஆர்வம் முக்கியமாக அவர்கள் ஓரே நாளில் கற்றுக் கொண்ட திறன் எம்மை ஆச்சரியத்துக்கு உட்படுத்தியது. முதல் நாள் கற்று அடுத்த நாள் எம்மோடு சேர்ந்து பறை இசையை இசைத்து மக்களுக்கு காட்டியபோது மிகுந்த ஆச்சரியமாக இருந்தது, அதனைத் தொடர்ந்து வெவ்வேறு மாநிலங்களில் இருந்து எமது மக்களின் ஆதரவோடு நடாத்துகின்றோம். கடந்த மாதமும் மெல்பேன் கேசித் தமிழ் மன்றத்திலும் தமிழ் சிறுவர்கள், பெரியவர்கள் ஆகியோர்க்கும் பயிற்றுவித்தோம். 160 க்கும் மேற்பட்டோர் கலந்து சிறப்பித்தார்கள்.*

**பறை இசைக் கருவி அல்லது பறை இசை பற்றி தமிழர்கள் மத்தியில் எப்படிப் பார்க்கப் படுகின்றது.?**

*பறை இசை என்பது எமது பண்டைத் தமிழர்கள் எமக்குக் கொடுத்த அற்புதமான கொடை. பண்டைய இசைக் கருவிகளில் மிக முக்கியமான இசைக் கருவி பறை இசைக் கருவி என்று தான் ஆய்வாளர்கள் சொல்கின்றார்கள். இதனை வாசிக்கும் பொழுதும் கேட்கும் பொழுதும் மனதில் உற்சாகம் ஏற்பட்டு மன அழுத்தம் குறைவதையும் நாம் உணர முடியும். மனதில் ஏற்படும் எழுச்சி என்பது வேறு எந்த இசைக் கருவிகளாலும் ஏற்படுத்த முடியாது என்பது ஊகிதமான உண்மை. இது காலம் வரை இக் கருவியை தமிழர் எப்படிப் பார்த்தார்கள் என்பது பற்றி பேச நான் எழவில்லை. இப்போது பறை இளைஞர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.*

**புலம் பெயர்ந்த நாட்டில் பறை இசைக் கருவியையும் மற்றைய கலைகளையும் பயிற்றுவிக்க விரும்புவது ஏன்?**

*புலம் பெயர்ந்த நாட்டில் பறை இசையையும் மற்றைய கலைகளையும் நிச்சயமாக எமது தமிழ் சிறார்களுக்கு பயிற்றுவிக்க வேண்டியது அல்லது தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும். ஏனென்றால் இதுவரையும் எமது மக்கள் திசை இசையை மட்டுமே கேட்டும் அறிந்தும் உள்ளார்கள். அத்தோடு திசை இசை தான் தமிழரின் இசை என்று தமிழர்களில் பெரும்பான்மையான தமிழர் தாய்களும்--- மனம் மகிழ்ந்து மற்றைய இன மக்களுக்கும் காட்டி மகிழ்கின்றார்கள். இது நாம் அறியாமற் செய்யும் ஓர் பிழை. இதற்கு மாறாக தமிழில் அளவுக்கு அதிகமான கலைகள் உள்ளன. இக் கலைகளை நாமும் கற்று மற்ரவர்களுக்கும் கற்றுக் கொடுப்பதால் மட்டுமே எமது தமிழிசையின் அடையாளத்தைப் பேண முடியும். யேர்மனியர்கள், இத்தாலியர்கள், சீனர்கள் தங்களின் இசையைக் காட்டும் போது நாம் திசை இசையை பல்லின கலாச்சார நிகழ்வுகளில் காட்டுவது தடுக்க வேண்டும்.*

**பறை இசைக் கருவியை தமிழர் அல்லாத் மக்களுக்கு எப்படிக் கொண்டு செல்லலாம் என் நினைக்கிறீர்கள்.?**

*இங்கு வளரும் எமது தமிழ் சிறுவர்களை எடுத்துக் கொண்டால் மேற்கத்தேய இசைக் கருவிகளை இலகுவாகப் பழகிக்*

*கொண்டிருக்கிறார்கள். இதே நேரம் மற்றைய இன மக்கள் எமது இசைக் கருவிகளை இசைப்பதை நாம் காண முடியாது. ஆனால் நாம் இதனை மனதில் கொண்டு தான் செயற்படுகின்றோம். இன்று இல்லாவிட்டாலும் ஒரு நாள் அவுஸ்ரேலியாவில் உள்ள பல்லின மக்கள் இந்த தமிழ் இசைக் கருவியை பழகுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குப் பிறந்திருக்கிறது. நாம் ஒரு நீண்ட தூர நோக்கில் இயங்கிக் கொண்டிருக்கிறோம் என்பது உண்மையே.*

**எதிர்காலத்தில் பறை இசை எந்தத் தரத்தில் இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

*இங்குள்ள தமிழர்களின் அடையாளமாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இங்கு வாழும் மற்றைய இன மக்களுக்கு தங்களின் நடனம், இசை என்பன எப்படி அவர்களின் அடையாளமாக இருக்கிறதோ அது போல எமது தமிழ் மொழியின் அடையாளமாக தமிழிசையின் இசைக் கருவி பறை ஒரு அடையாளமாக இருக்க வேண்டும் என்பது தான் எனது பெரும் கனவு. அது நிச்சயமாக நிறைவேறும்.*

## வெண்பா பூர்த்தி செய்தல்

**வெண்பா 1**

*முத்தான கருத்துக்களால் எக்காலத்திற்கும் பொருந்தும்*
*சத்தான கலைச்செல்வம் தருவதனால் – இப்பாரில்*
*அத்தனை மொழிகளுக்கும் அன்னையாய் விளங்குமெங்கள்*
*தமிழ் உன் தாயென்றுணர்*

**வெண்பா 2**

*நனி சிறந்த தமிழுக்கு நலங்கள் நிறை ஹார்வார்டில்*
*தனி இருக்கை அமைத்திட்டார் நம் தமிழர் – ஆய்வுகளில்*
*கனித்தமிழின் நுண்மை கணனி வழி பரவி நிற்க*
*இனி வருங்காலம் நமதென்று சொல்*

**-க. மணிவண்ணன்-**

**வெண்பா 1**

*மண்ணில் அகழ்ந்த எண்ணை உண்ணவுமில்லை*
*பின்னே கமழ்ந்த மண்டல புகையில் கரியுமில்லை*
*என்சக்கரங்கள் சாலையில் ஏவ மனிதா நீயுமில்லை*
*இனிவரும் காலம் நமதென்று சொல்*

**வெண்பா 2**

*ஊனத்தில் ஊற்றெடுக்கும் உற்சாகம் நிறைக்கும்*
*காதலில் கனிவோடு கசியும் பண்பு அகம் புடைக்கும்*
*சாதனை காட்டும் ஆற்றல் முகம் நன்றே படைக்கும்*
*தமிழ் உன் தாயென்றுணர்*

**-சத்தியா நிரஞ்சன்-**

## வேதாளத்தின் கேள்விகளுக்கு விக்கிரமாதித்தன் கூறிய பதில்

இந்தக்கதையில் வருகின்ற சண்முகத்தின் நடவடிக்கைகள் ஒன்றைத் தெளிவாக உணர்த்துகிறது. அவன் அதிகாலை இரண்டு மணிக்கே எழுந்துவிடுகிறான். இரவு, பகல் வேறுபாடுகள் அவனுக்கு இல்லை. கடல் எது, தரை எது என்று பிரித்துணர அவனுக்குத் தெரியவில்லை. அவன் எப்போதும் ஒரு கைத்தடியையும் துணைக்கு ஒரு நாயையும் வைத்திருக்கிறான். இதன்வழி பார்க்கையில் சண்முகம் ஒரு பார்வைப்புலன் அற்றவனாக இருப்பதற்குரிய ஏதுக்களே கதையில் அதிகம் கிடைக்கிறது. அன்றேல் அவன் பேதைமை நிறைந்தவனாக இருத்தல் வேண்டும். இப்படியான ஒருவனிடம் பலரும் கழிவிரக்கமும் பரிதாபமும் காட்டுவதைப் புரிந்துகொள்ளமுடிகிறது.

கழிவிரக்கமும் பரிதாபமும் அளவுக்குமேல் காட்டும்போது, அதை யாருக்குக் காட்டுகிறோமோ அவரை அது படுகுழியிலேயே வீழ்த்திவிடும். அது மாத்திரமன்றி பரிதாபம் காட்டுபவரையும் சேர்த்து அது வீழ்த்திவிடும். சண்முகத்துக்கு தூண்டில் மீன் பிடிக்கும் ஆர்வம் இருப்பின் அவனுக்கு அதற்கான பயிற்சியையும் ஊக்கத்தையும் கொடுக்கவேண்டுமே ஒழிய, அவன் தரையை நோக்கித் தூண்டில் எறிவதைப்பார்த்து "ஐயோ பாவம்" என்று அவன் தூண்டிலில் மீனைச் சொருகுவது எந்த வகையிலும் சரியான செயலாகப்போவதில்லை. அது எந்த வகையிலும் அவனுக்கு நீண்ட காலப்போக்கில் உதவப்போவதுமில்லை. அந்த மீனவ சமூகத்தில் ஏன் ஒருவர்கூட சண்முகத்திடம் மீன்கள் எதிர்த்திசையில் இருக்கும் கடலில் பிடிக்கப்படவேண்டியவை என்று சுட்டிக்காட்டவில்லை? அப்படிச் சொல்லியிருந்தால், அவன் தூண்டிலில் எவரும் அழுகிய நாறிய மீன்களைச் சொருகாமல் விட்டிருந்தால், சண்முகம் உண்மையிலேயே ஒரு தேர்ந்த தூண்டில்காரனாகக் காலப்போக்கில் வந்திருக்கமுடியும். ஏனெனில் ஒரு தூண்டில்காரருக்குரிய முயற்சியும் பொறுமையும் அவனிடம் உண்டு. ஆனால் அவன் அத்திறனை அடைய விடாமல் அவனைச் சூழ இருந்தோரே அவனைக் கெடுத்துவிடுகின்றனர். அவன் நாய், கூடையில் மீன் சேர்ந்ததும் அவனிடம் வாலாட்டியபடி வந்து நிற்கிறது. தவறணையில் மற்றவர்கள் பொழுதுபோக்குக்காக அவன் புழுகுகளை கேட்டு ரசிக்கிறார்கள். சந்தர்ப்பவாதிகள் அவனைத் தலைவனாக்கி அதன்மூலம் தம் காரியங்களைச் சாதிக்க நினைக்கிறார்கள். தகுதி அடிப்படையிலன்றி, தம் இருத்தலுக்கு ஆபத்து ஏற்படுத்தாதவர்களையும், தமக்கு சார்பானவர்களையும், தேவைப்பட்டோரையும் தூக்கிக்கொண்டாடுவது என்பது கீழ்மை நிறைந்த மனிதரின் குணமாகும். அதனையே சண்முகத்தைச் சூழ்ந்திருப்போர் செய்கின்றனர். அவன் மனைவியோ அவள் பிடித்த களங்கண்டி மீனை சண்முகம் தன்னுடையது என்று பெருமை அடிக்கும்போதும் அமைதி காக்கிறாள்.

ஆக, சண்முகம் பார்வைப்புலன் அற்றவனாகவோ அல்லது பேதைமை நிறைந்தவனாகவோ இருக்கலாம். புலன் இருத்தலும் இன்மையும், புத்திக்கூர்மையும் பேதைமையும் உயிரியலின் தெரிவு. அது எவருடைய தவறும் கிடையாது. இயற்கையின் நியதி அது. ஆனால் பார்வைப்புலன் இல்லாத சண்முகத்துக்கு கண்கள்போலச் செயற்பட்டிருக்கவேண்டிய அவனுடைய சமூகம், அவன் பேதைமையைத் தெளியவைத்து அவனுக்கு அறிவுபுகட்டியிருக்கவேண்டிய அந்தச் சமூகம், அதனைச் செய்யாமல் அவனை மேலும் மழுங்கடித்து அதிலிருந்து குளிர்காய முயற்சிக்கிறது. எதுவுமே செய்யாமல் வாளாவிருக்கிறது.

ஒரு சமூகத்தின் அத்தனை மக்கள்கூட்டமும் ஒன்றுசேர்ந்து தவறான தலைமைத்துவத்தைத் தேர்ந்தெடுப்பதன்மூலம், தம்முடையதும் தம் எதிர்கால சந்ததியினரதும் அழிவுக்கு வழிகோலுகிறது. அந்தச்சமூகத்தின் அறிவுடையோர் தமக்கேன் வம்பு என்று பேசாமடந்தையராயிருப்பதன்மூலம் அக்கொடுஞ்செயலுக்குத் துணைபோகின்றனர். வரலாற்றின் பல மிகப்பெரிய சமூக நாகரிகங்களும் கலாச்சாரங்களும் இப்படியான செயற்பாடுகளாலேயே அழிந்துபோயின.

ஆக இந்தக்கதையில் பெருந்தவறிழைப்பவர்கள் 'அறிவுபுரம்' கிராமத்து மக்களேயாவர். விக்கிரமாதித்தனது இந்தச் சரியான பதிலால் அவனது மௌனம் கலையவே, வேதாளம் பறந்துசென்று மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது.